ருமபுரம் ஆதினம் இலவச வெளியீடு-30.

T-UN-122

உ

குருபாதம்,

ஸ்ரீ சிவஞானதேசிகர்

நான்மணி மாலை.

ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர்

தோத்திரப்பாடல்.

செந்தமி ழிரட்டைமணி மாலை.

இவை

திருக்கைலாயபரம்பரை தருமபுரம் ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் ஆக்ஞைப்படி

ஷை ஆதீன வித்வத்சிகாமணி திருவாளர்
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை
அவர்களால் பார்வையிடப்பட்டு

ஷை ஆதீனத்திற்குச் சொந்தமான திரிசிரபுரம்
மௌனமடம் கட்டளை
ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத்தம்பிரான்
அவர்களால்

ர்காழி [illegible] ள் பிரஸில்
[illegible]க்கப்பட்டது.

பிரதி] 1940. [1000

7/-

தருமபுரம் ஆதீனம் இலவச வெளியீடு.

உ

குருபாதம்.

திருக்கைலாயபரம்பரை தருமபுரம் ஆதீனம் 10-வது
குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிக பரமாசாரிய சுவாமிகள் மீது
ஸ்ரீ சதாசிவபண்டாரம் அவர்களால் இயற்றப்பட்ட

நான்மணி மாலை.

ஷை ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் ஆக்ஞைப்படி

ஷை ஆதீன வித்வத்சிகாமணி திருவாளர்
ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை
அவர்களால் பார்வையிடப்பட்டு

ஷை ஆதீனத்திற்குச் சொந்தமான திரிசிரபுரம் மௌனமடம்
கட்டளை மௌன
ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் அவர்களால்

சீர்காழி ஸ்ரீ அம்பாள் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1940.

பிரதி] [1000

உ

குருபாதம்.

முகவுரை.

ஸ்ரீ சிவஞானதேசிகர் நான்மணி மாலை.

இஃது திருக்கைலாயபரம்பரைத்தருமபுரம் ஆதீனத்தில் ௬-வது குருமூர்த்தியாயெழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் ஞானானுபவத்தையும் அநுக்கிரகத்தையும் திருவருட்டன்மையையும் விளக்கிக்கூறுவது.

நான்மணி மாலையாவது

வெண்பாவும் கலித்துறையும் விருத்தமும் அகவலும் அந்தாதித்தொடையாக மண்டலித்து வர நாற்பதுபாக்களால் பாடுவது. இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும் நடையழகும் தொடையழகும் துறையின் நோக்கும் செவ்விதின் அமைந்துளது. இந்நூலி லீடுபட்டோர் சிவஞானசித்தியையும் பரபோக முத்தியையும் கல்விச்செல்வம் பொருட்செல்வங்களையும் அடைவர். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் சைவசித்தாந்தசாரம் அமைந்திருப்பது மன்றிச் சற்குருவை மனமொழி மெய்களால் வணங்கித் துதிப்பதற்கேற்ற தோத்திரங்களும் நிரம்பியிருக்கின்றன. இந்நூலை ஆக்கியோர் இற்றைக்குச் சுமார் 200 ஆண்டுகட்கு முன்னிலிவரது மாணாக்கரும் அபிஷேகஸ்த மரபில் தோன்றினவருமாகிய ஸ்ரீ சதாசிவபண்டார மென்பவராவார். இவரது கல்வித்திறம், குருபக்தி, ஈச்வரபக்தி, அடியார்பக்தி முதலிய பக்தித்திறமும் இந்நூலை வாசிப்பவர்கட்கினிது விளங்குமாதலின் அதனை யீண்டு விரித்துரைக்கவில்லை. இந்நூலில் ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் செய்தருளிய பற்பல சித்திவல்லபங்களும் கூறப்பட்டுள்ளன. அவை 40-வது செய்யுளில்

" மாநகர் வருசிவஞான தேசிகனே " என்பது முதல் கண்டு கொள்க. இவையன்றியும் இக்குருமூர்த்திகளைப் பற்றி மற்றொரு செய்யுளும் வழங்கிவருகிறது. அச்செய்யுள் :—

அருஞ்சித்தர் தனையழைத்து முத்தியினைக் கொடுத்தும்
அழகமைந்த மடந்தைதனை விருத்தையாய்ச் செய்தும்
பொருநோயன் தீர்த்தத்தின் மூழ்கிடவே தீர்த்தும்
போற்றிமார் தீவர்த்தி பிடித்துவரச் சென்றும்
பெரும்பிரம ராக்கதந்தா னீங்கவருள் செய்தும்
பின்சாண நீர்த்தெளிவை யருந்திவரக் கண்டும்
வரும்பிரம ராக்கதத்திற் கனுட்டான மளித்தும்
மகிழ்தருமைச் சிவஞான வள்ளலடி பணிவாம்.

இவர்கள் யாத்திரை செய்த தலங்கள்:—

மதுரை, திருச்செந்தூர், சிதம்பரம், காசி முதலியன.

இவர்கள் காசியாத்திரை செய்த காலம் கி. பி. 1740.

காசிமடம் கி. பி. 1720ல் திருப்பனந்தாளில் இக்குருமூர்த்தியின் அனுமதிபெற்று, ஸ்ரீமத்தில்லைநாயகத்தம்பிரான் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது.

இவர்களியற்றிய நூல்கள்.

1. காசித்துண்டி விநாயகர் திருவருட்பா
2. காசிக் கதிர்காம வேலர் திருவருட்பா
3. செல்வமுத்துக் குமாரசுவாமி திருவருட்பா
4. கேதாரகௌரி திருவருட்பா
5. விசுவநாதர் திருவருட்பா
6. சிதம்பரம் நடேசர் திருவருட்பா
7. தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா
8. காலபயிரவர் திருவருட்பா

9. பாகீரதியம்மை திருவருட்பா
10. தாரகப் பத்து
11. சித்தீச்சுரம் (திருவாரூர்)
    தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா
12. தண்டபாணி திருவருட்பா (இது கிடைக்கவில்லை)

இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் :—

தருமபுரம்ஆதீனம் மடாலயம் பூஜைமடத்திலுள்ளவை.

கலியுகவருஷம் ௪௲௮௱௪௰௨-ல் சகாப்தம் ௧௲௬௱௬௰௩க்கு மேற்செல்லாநின்ற ரௌத்திரி வருஷம் சித்திரைமீ ௯௨ ஒன்பதாங் குருமூர்த்தமாக அவதரித்த திருநாவுக்கரசு தேசிகனருள் பெற்ற சிவஞானதேசிக சம்பந்தனருட் செங்கோல் செலுத்தும் நாளையிற் சொக்கநாதசுவாமி பூஜைமடமுந் தம்பிரான்கள் பூஜைமடமுந் தொட்டிக் கட்டுஞ் சித்திரக்கட்டுங் கருங்கல் திருப்பணியாகக் கட்டி நிறைவேறினது.

புள்ளிருக்கும் வேளூர் (வைத்தீஸ்வரன் கோவில்) அம்மன் சந்நிதியிலுள்ள சித்தாமிர்தத் தீர்த்தப் படித்துறையில் உள்ளவை.

I. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1689 கலியுக௵ 4868 இதன் மேற்செல்லாநின்ற சருவசித்து௵ ஆவணிமீ போஸ்லே வங்சத்தார்களான துளசாமகாராச சாயபு அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீமல்லாசிகாடேராயரவர்களுக்கு சீர்காழிச் சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரச்சன்னதி ஸ்ரீ சிவஞானதேசிகசம்பந்தன் அநுக்கிரகத்தைப் பெற்ற முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்கள் வயித்தியநாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் ரெண்டாம் பிரகாரம் நாலுபுறத்து மதிலும் திருமாளிகைப் பத்தியும் அம்மன்சன்னதி தட்டி சுற்றி மண்டபமும் சாங்கமாகக்கருங்கல் திருப்பணியாய் கட்டி நிறவேற்றி அந்த திருமாளிகைப்பத்தியின் மேலே நாலுபுறமும் வவ்வால் நெற்றிகட்டி நிறைவேறினது.

II. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகனசகாத்தம் 1692-கலியுகஹெல் 4871-க்கு இதன் மேற்செல்லாநின்ற விக்ருதிஹூ வைகாசிமீ போசலே வங்சத்தார்களான துளசாமகாராசசாயபு அவர்கள் ராஜ்யபரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீமல்லாசி காடே ராயரவர்க்குச் சீர்காழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரச்சன்னதி ஸ்ரீ சிவஞானதேசிக சம்பந்தன் அநுக்கிரகத்தைப்பெற்ற முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் அவர்கள் வயித்தியநாதசுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் தீர்த்தகரை நாச்சாரியும் மண்டபமும் சாங்கமாக கருங்கல் திருப்பணியாய் கட்டி நிறைவேறினது.

இவர்களிடம் அநுக்ரகம் பெற்ற முனிவர்களும் வித்வான்களும் :—

ஸ்ரீ சச்சிதாநந்ததேசிகர், தமிழாகரமுனிவர், சிதம்பரநாதமுனிவர், திருக்கடவூர் பஞ்சாக்கரமுனிவர், திருப்புன்கூர் சிவப்பிரகாசர், சங்கரகுமாரமுனிவர், சிவானந்தமுனிவர், எல்லப்பநாவலர் முதலியவராவார்கள்.

இவர்கள்காலம் மேலேகண்ட கல்வெட்டுக்களினாலும் பிறகர்ணபரம்பரைக்கதைகளினாலும் கி. பி. 18-ம் நூற்றாண்டெனத்தெரிகிறது.

II

தோத்திரப்பாடல்.

இது திருக்கைலாயபரம்பரை தருமபுரம் ஆதீனத்தில் கூ-வது குருமூர்த்தியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருட்டன்மையை வியந்து இருபத்திரண்டு வெண்பாக்களில் புகழ்வது. ஷை சுவாமிகள் திருவாரூருக்கு எழுந்தருளியிருந்த காலத்தில் சுவாமிகள் கிருபாநோக்கத்தால் ஞானநெறியை யடைந்த

அங்கர் வாசியாகிய சிதம்பரநாதமுதலியாரென்பவர் தமது அநுபவத்தைக் கூறும் வாயிலான் சற்குருவின் பெருமையையும் சைவசித்தாந்தத்தினுண்மைப் பொருளேயும் கூறுவது. இந்நூல் இயற்றிய காலம் பதினேழாம் நூற்றூண்டெனத் தெரிகிறது.

III

செந்தமி ழிரட்டைமணி மாலே.

இரட்டைமணி மாலேயாவது வெண்பாவுங் கலித்துறையுமாக இருபது பாடல்களால் அந்தாதித் தொடையாகப் பாடுவது. இந்நூல் உயர்தனிச் செம்மொழியாகிய செந்தமிழின் தொன்மையையும் பெருமையையும் விளக்கிக் காட்டுவதால் செந்தமி ழிரட்டைமணி மாலே யெனப்பட்டது.

இதனே ஆக்கியோர் திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் தம்பிரான்குழாங்களில் ஒருவரும் திருவாதி,சீர்காழி, வேளூர் முதலிய தேவஸ்தானங்களில் கட்டளே விசாரணே வகித்தவரும் தருமபுரம் ஆதீனம் 17-வது குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசகதேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் உபதேசம் முதலியன பெற்றவரும் சிதம்பரம் செந்தமிழ்ச் சங்கம் அக்கிராசனுதிபதியாயிருந்தவருமாகிய வித்வான் ஸ்ரீமத் சண்முகத்தம்பிரான் சுவாமிகளால் ஷை சங்கம் இரண்டாம் வருடோற்சவ காலத்தில் அரங்கேற்றப்பட்டதாகத் தெரிகிறது. அரங்கேற்றிய காலம் கி. பி. 1907. இவ்விரட்டைமணி மாலேயினல் இவர்களுடைய தமிழ் பக்தி நன்கு விளங்குகிறது.

இவ்வாசிரியர் தமிழ் பக்தியோடு குருபக்தியிலும் மேம்பட்டவரென்பது தன்னுசாரியரைத் துதிக்கும் கீழ்வரும் செய்யுளால் நன்கு விளங்குகின்றது.

காணிக்கை வைத்து வணங்குவன் றென்றிசைக் காவலனும்
சேனேப் புரக்கும் வலாரியுந் தெண்ட னிடுவனன்றே

பூணிற் பொலிபொன்னி சூழ்ந்த தருமை புரத்தினில்வாழ்
மாணிக்க வாசக தேசிகன் றுடொழ வல்லவர்க்கே.

என்று தனக்கு ஞானசாரியரான தருமபுரம் ஆதீனம் 17-வது குருமூர்த்தியைப் பாடியுள்ளார்கள்.

IV
தனிச் செய்யுள்.

இஃது இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இச்செய்யுட்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தன்னுள்ளடக்கியும் விசேடப்பொருள்களையுங் கொண்டு மிளிர்கின்றன. 5-வது செய்யுளில், "சேர்த்தினுன் காழி மெய்யருளும் வள்ளல்" என்றிருப்பதினுல் காழி வள்ளல் பரம்பரையில் ஒருவர் செய்ததாகக் கொள்ளலாம்.

வெளியிட்டோர் பெருமை.

உலகோபகாரமாக இந்நூல்களை யாவர்க்கும் எளிதில் கிடைக்கும்படி அச்சிட்டு இலவசமாக வழங்கி வருபவர்கள் திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் சுத்தாத்துவித சைவசித்தாந்த ஞானசாரிய பீடத்தில் இருபத்து நான்காவது மகாசந்நிதானமாய் விளங்கித் திருவருட் செங்கோல் நடாத்திவருகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தங்களாதீனத்திற்குச் சொந்தமான தேவாலயங்களைப் புதுப்பித்தும் நித்தியநைமித்திக விழாக்களைச் சிறப்புறச்செய்தும் சமயவளர்ச்சியையும் செந்தமிழ்வளர்ச்சியையும் கருதிச் சிவபோகசார முதலிய பலநூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகிறுர்கள். இதனுல் சிவபரத்வமும் சிவாசாரமும் நமது நாட்டில் தழைத்தோங்கிவருகின்றன. தருமபுரமடாலயத்தில் நூதன வேலைப்பாடுகள் பல செய்வித்தும் வீதிகளிற் பல கட்டடங்கள் கட்டுவித்தும், மின்சாரங்களினுல் நகரை அலங்கரித்தும்

சிவராஜதானிகரமாகச் செய்து வருகின்றார்கள். ஆதலின் கலைமகளும் திருமகளும் ஞானப்பெருமகளும் சேர்ந்து அந்நகரில் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நூல்களை அச்சிடுவித்துத் தமிழ் மக்களுக்கு உபகரித்து வராநின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் நெடுங்காலம் ஆதீன கர்த்தராக வீற்றிருந்து திருவருட் செங்கோல் நடத்தும் வண்ணம் ஸ்ரீ பரமகுருமூர்த்திகளின் பாதங்களை அனவரதம் தியானிக்கின்றேன்.

இந்நூல்கள் வெளிவரும்படி பல்லாற்றானும் முயற்சியெடுத்துக் கொண்ட ஷை ஆதீனம் புத்தகநிலையப் பார்வையாளர் திரு. அ. பொ. சிதம்பரதேசிகர் அவர்கட்கும் புரூப் முதலியவற்றைத்திருத்த உதவியாயிருந்த சீர்காழி லூத்தரன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திரு. D. சுந்தரேச ஆச்சாரி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

தருமை வளம்பதியைச் சார்ந்துதுதிப் பார்க்குப்
பெருமையுறு முண்டாநற் பேறு.

பறங்கிப்பேட்டை, 23—10—40. } ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

௨௪-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ சண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிவஞானதேசிகர் நான்மணி மாலை.

காப்பு.

சித்தமகிழ் கூடற் சிவஞான தேசிகன்சீர்
வைத்ததமிழ் நான்மணி மாலைக்கு—மெய்த்§தவமேற்
கொண்டனருட் குஞ்சரமே கொண்டவனை வென்றகறைக்
கண்டனருட் குஞ்சரமே காப்பு.

நூல்.

வேண்பா.

திருமாலும் பூமேற் றிசைமுகனுங் காணாப்
பெருமான் கயிலைமலைப் பெம்மான்—குருவடிவாய்த்
தென்னூரர் வாழச் சிவஞான தேசிகனென்
றிந்நாள்வந் தான்பார்வை யின். 1.

கலித்துறை.

இன்னற் குறுதுணை யென்னப் பிறந்திறந் தெய்த்தெழுநாட்
பின்னற் படக்குறும் பேதைக்குன் பாதம்ப்ர காசிக்குமோ
சொன்னற் கருணைச் சிவஞான தேசிக தூயபுகழ்த்
தென்னற் கருளு மதுரா புரிவரு தேசிகனே. 2.

---

§ தவமேற்கொண்டனர் உட்கும் என்று பிரிக்க. உட்கும்—அஞ்சும். சரம்—புஷ்பபாணம். கொண்டவன்—அம்பாகக் கொண்டவன், மன்மதன்.

1. பார்வை—தீபகம். மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல மானிடர்களாகிய சகலர்க்கு மானுடத் திருமேனி கொண்டருளுதலின் பார்வையென்றார்.

2. இன்னல்—துன்பம். பின்னற்பட—நீங்க.

விருத்தம்.

தேசிகன் வடவா லகன்றுதென் கமலைச்
சிவஞான தேசிக னென்ன
நேசமோ டுவந்து நால்வருக் கன்றி
நிகரிலாப் பெருமைசேர் தவத்தோர்க்
காசையை யுடையா னருளுவான் வந்தா
னவனருண் மோனவா சகத்தாற்
பேசவுங் கருதி நினைக்கவுங் கூடாப்
பேறன்றி மற்றெவன் பெருமை. 3.

அகவல்.

பெருமையி னிருமையு மொருமையி னளிக்கு
நாமகண் மகிழத் தாமரைப் பொகுட்டின்
நடுவண திருந்து தொடுகட லுடுத்த
மண்முதல் வகுத்த வெண்விழிக் கடவுளும்
பாற்றிரைக் கடலி னாற்றிசை விரிக்கும்
பணம்பெறு மணியின் கணம்பெறு சுடர்கள்
ஆறு திமைக்கு மாறு கணைமேல்
அறிதுயி லமர்ந்த பொறிபுறு நிறத்தனு
நன்னிறத் தூவி யின்னடை யன்னமுங்
கூர்வளைக் கோட்டுக் காருடற் பன்றியு
மாகி விண்கடந் தேகிக் கனலிற்
கொழுந்து நிமிர்ந்தாங் கெழுந்த செஞ்சடைக்

3. வடவால்—கல்லால விருக்ஷம். நால்வர்—சனகாதி நால்வர்.
4. எண்விழிக்கடவுள்—பிரமன்.
பொறியுறுநிறத்தன்—இலக்குமி பொருந்திய மார்பையுடைய திருமால்.

காடு மாறுத் தேடின ராகலிற்
றெரிவரி தாகி யிருவரு மயங்கச்
செங்கதிர்த் திரளும் பொங்கழற் றெருகுதியு
மோருழி மணந்து பேரொளி யாகிச்
சென்றுல குருவ நின்றரு ளிறைவன்
கழைச்சிறு மகவைக் கறுத்தெழு மறலி
பதைத்துமண் குளிப்ப வுதைத்தபொற் பதத்தோன்
கடன்முகட் டெழுந்த விடமமு தென்னக்
கண்டு முன்னெடுத் துண்டருள் கண்டன்
வேறுபட் டெழுபுர நீறுபட் டழிய
வளவிய லறியா விளநகை முகிழ்த்தோன்
கருப்புவில் வளையாச் சுருப்பு நாண்கொளீஇ
மலர்க்கணை தெரித்தோ னிலக்கெனக் குளத்தின்
அரும்பிய மலர்க்கட் பெரும்போர்க் கடவுள்
குடிலையிவ் வுலகில் வடிவுகொண் டென்னத்
தழைத்தருள் வடதரு நிழற்கீ ழிருந்து
வினையகற் றுதற்கு நினைதலு முனிவோர்
மருளினை வீட்டி யருளினைக் காட்டும்
பொன்னிதழ்க் கமல மன்னகைத் தலத்தோன்
ஆரா வமுத வாரார் களபக்
குவிமுலைத் தடங்கட் பவளவாய் மயிலைப்

மாறுத்தேடினர்—பிரம விட்டுணுக்கள் நான் பெரியன் நான் பெரிய னென்று அகங்காரத்தால் தம்முள் மாறுபட்டுப் பூசலிட்டுக்கொண்டு தேடினர். அன்றியும் பிரமன் அன்னவுருக்கொண்டு அது தேட வேண்டிய (அடித்) தாமரையையன்றிச் சடைக்காட்டைத் தேடினதும் விட்டுணு வராகவுருக்கொண்டு அது தேடவேண்டிய(சடைக்) காட்டையன்றி அடித் தாமரையைத் தேடினதும் மாறுபாடாதல் காண்க. ஒருழி—ஓரிடம். குளம்—நெற்றி. குடிலை—பிரணவம். வடவாலை, குடிலை யெனவும் திருவருளெனவும் கூறுவர்.

பாகத் திருத்தும் யோக நாயகன்
புன்னெறி மாற்றி நன்னெறி விளக்கு
மூவர் செந்தமிழ்ப் பாவுக் குவந்தோன்
தக்கபுண் ணியத்தான் மிக்கபக் குவத்தின்
அன்பருக் கருள்வான் மின்புரை வேணியின்
பாய்திரை சுருட்டுந் தூயநீர்க் கங்கையும்
ஊற்றமு தொழுக்குங் கீற்றிளம் பிறையுங்
கதுமென விழித்த நுதலழற் கண்ணுங்
களத்தினிற் கறையும் வளைத்தவில் வரையும்
எண்டிசை யுலகு மண்டமு மதிரா
வூழிக் காலத் தாழியின் முழக்கைத்
திருச்செவி மறைக்கு மருட்கண் மானும்
விடுசுட ரெறிக்கு மடுதிறற் கணிச்சியுங்
கரந்தடி யவர்தா நிரந்தரம் பரவக்
கன்னற் காடுஞ் செந்நெற் கழனியுங்
குருமணிக் குலத்தொடு மரகதத் திரளை
மாகமேற் பரப்பும் நாகிளங் கமுகுஞ்
செப்புதற் கரிதா முப்புடைக் காய்க்குலை
விரிதலை யெடுத்துவான் றெரிவையர்க் கருள்வான்
மட்டிலா துயர்ந்த நெட்டிலைத் தாழையுந்
தேனினைத் திரட்டி வானிடைத் தூக்கி
வைத்தது போற்கனிக் கொத்துறு மாவும்
பைம்பொற் குடத்திற் செம்பொற் றகட்டை
மடித்தடுக் கியசுளை யுடைத்தனி வருக்கையுங்
கற்புடை மாதர் பொற்புட னிறைஞ்சி

வேணி—ஜடை. கணிச்சி—மழு. மாகம்—ஆகாயம். நாகு—இளமை. (ஒருபொருட்பன்மொழி) முப்புடைக்காய்—தேங்காய். வருக்கை—பலா.

நிலனைக் குதல்போற் றலையுற வணங்கித்
தாற்றிடைப் பழுத்தமு தூற்றிடு மரம்பையும்
இன்னன முதலா மன்னிய தருக்குலம்
விண்ணுல களப்பா னண்ணிய வென்ன
வோங்கிய சோலையும் பாங்கரிற் சூழ
வுற்பல மலர்ந்த பற்பல வாவியும்
சேந்தசெங் கழுநீ ரேந்திய பொய்கையும்
முருகுகொப் புளிக்குந் திருமலர்த் தடமும்
ஈரிரு திசையினுஞ் சீர்பெறச் சூழக்
கந்தரந் தவழு மந்தர வரையின்
வழ்நிலை மாடமுங் கேழ்கிளர் கூடமும்
மன்னிய தருமை நன்னகர் தழைய
விடப்பால் வைத்த மடப்பா வையைத்தன்
கடைக்கணி லமைத்து விடைக்கொடி யுயர்த்துச்
சிரமிசைத் தரித்த தவநதிப் பெருக்கை
நாவலர் புகழ்செஞ் சேவடி வைத்துத்
தவமா தவர்பணி சிவஞான தேசிகன்
என்றெழுந் தருளி யன்றுமா லறியாப்
பொன்னடிக் கமல மென்முடி சூட்டி
நேசமோ டிருவினைப் பாசவே ரகழ்ந்தாங்
கருட்கடை நோக்கா லிருட்படாங் கீறி

தாறு—குலை. அரம்பை—வாழை. உற்பலம்—நீலோற்பலம். முருகு—வாசனை, தேன். கந்தரம்—மேகம். இடப்பால்வைத்த மடப்பாவையைத்தன் கடைக்கணில்வைத்தல்—இடதுபக்கத்திலிருக்கிறபார்வதியாகிய திருவருளைத் தமது கண்ணில்வைத்தல், கிருபாநோக்கம். வாநதிப்பெருக்கைத் தன் சேவடிவைத்தல்—கங்காதீர்த்தம் பாவத்தைநீக்குதல்போல தமது பாததீர்த்தமும் பாவத்தை நீக்குதலால் வாநதிப்பெருக்கைத் தன் சேவடிவைத்தென்றார்.

யீறிலா மலரடி யிணைக்கீழ்
மாறிலா திருக்க வரந்தந் தனனே 4.

வெண்பா.

தந்தனன் மிக்க தவங்கல்வி யெஞ்ஞான்றுஞ்
சிந்தனை செய்யத் திருப்பேருஞ்—சந்ததமுஞ்
சீராருங் கூடற் சிவஞான தேசிகனிப்
பாராரு மன்பர் பதி. 5

கலித்துறை.

பதிபசு பாசத் தியல்பையெல் லாமதி பக்குவர்க்குத்
துதிசெய நல்கியெப் போது மவர்திருத் தொண்டுகொள்வா
யதிசயங் கற்றவர்க் கொண்டெளி யேனைப்பின் னுண்டு
கொண்டாய், மதிபுனை கூடற் சிவஞான தேசிக மாதவனே. 6

விருத்தம்.

மாத வம்பல செய்தாலுன் பங்கய
மலர டித்திரு மஞ்சனம் வாய்க்குமால்
போத வங்கனு ருற்றுனுன் சொல்வழிப்
புக்க பேர்கள் புகாம லிருப்பரால்
பாத வங்க ணிவந்தெழு பச்சைவாம்
பரியி னுக்கிளைப் பாற்றுந் தருமைவாழ்
நாத வந்தண் கருணை நிதிச்சிவ
ஞான தேசிக ஞானசம் பந்தனே. 7

---

6. கற்றவர்களையாட்கொண்டு அடியேனையும் ஆட்கொண்டது அதிசயம்.
7. கட்டளைக்கலிப்பா. இது விருத்தபேதத்துள்ஒன்று. போத—மிக. அனுர்—துன்பம். புகாமல்—கேட்டிற்குள்ளாகாமல். பாதவம்—விருக்ஷம்.

அகவல்.

தன்னிக ரில்லா விண்முக மமர்ந்து
கண்களிற் கருணைத் தண்கதிர் பரப்பிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்க் கொன்றை
துயல்வரு மாகத் தியல்பிது வெனச்சின்
முத்திரை பிடித்த கைத்தலங் காணூ
வீறி லொன்று வேறற நின்று
தசும்பு நீர்நிறைந் தசும்பு பரந்தாங்
காரா வமுதப் பேரா னந்த
வுள்ளக் கமலத் தள்ளூற் றெடுப்ப
விம்மித முற்று மெய்ம்மயிர் பொடித்துப்
பொம்மென வெழூஉஞ் செம்மாப் பெய்து
முற்றத் துறந்த பெற்றி யுடையோர்
ஓவிய மென்னச் சேவித்து நிற்க
வொருமையி னிருகால் வருவழி தடுத்து
மும்மையி னொருகுணந் தம்மன வாக்கி
நடுநா ளத்தி னிடையிடைப் படூஉ
நான்முகைக் கமல மேன்முக நோக்க
ஐம்புல னடக்கி யாறையும் விடுத்தாங்
கோருமோர் வழியி னேரிதிற் புக்குச்
சென்று சென்று நின்றுதாழ்ந் தொன்று
யின்ப சாகரத் தன்புரு வாகு
மாதவத் தோர்கள் காதலித் திறைஞ்ச

---

8. தசும்பு—குடம். அசும்பு—கசிதல். அள்ளூறு—மிகவூறுதல். இருகால்—இடைகலை, பிங்கலை. மும்மையிலொருகுணம்—சாத்வீகம். நாளம்—தாமரைத்தண்டு. நாலுதல்—கீழ்நோக்குதல். ஐம்புலன்—சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். ஆறையும்—காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்,.

நறுமலர் மஞ்சன மறுவறு மூர
லுரைபெறு சந்தனம் விரைகமழ் தீம்புகை
விடுசுடர்த் தீப மடைவினிற் கொண்டாங்
கைவகைச் சுத்தி செய்வகை யிபற்றி
யகண்ட மாய்நிறைந் தண்டங் கடந்து
படர்ந்தபே ரொளியைத் தொடர்ந்தபா வனையான்
மூர்த்தி யிடத்துப் பார்த்தருச் சிக்குந்
தெரிவரும் பெருமைக் குரியபே றுடையோர்
துணிவுட னிறைஞ்சிப் பணிவொடு துதிக்கப்
பதஞ்சலித் திடுமென் றிதஞ்சொல மாறி
யாடற் கிசைந்த கூடற் கோமான்
பணிவிடை புரியுந் தணிவுடை விரதிய
ரன்பொடுங் குழீஇ முன்பணிந் தேத்த
விமைய மீன்ற வுமைதிரு முலைப்பால்
அமுத முண்ட குமுதச் செவ்வாய்க்
கழுமலக் கவுணியன் விழுமிதிற் றெரிந்து
பொருள்பெற வெடுத்த வருள்பெறு பாடலுங்
கைத்திருத் தொண்டுசெய் மெய்த்திருத் தொண்டன்
நற்சுவை யமுதச் சொற்சுவை பழுத்த
காண்டகு தன்மைத் தாண்டகத் தமிழும்
அரையிரு ளதனிற் பரவைமா ளிகையி
னிலகுசெங் கமல மலரடி வருந்த
விருகால் விடுத்த வொருமா தவத்தோன்
தோழமை குறித்த வேழிசைப் பாடலும்
பெருந்துறை யதனிற் றிருந்தருள் பெற்ற
வாத வூர ரோதுவா சகமுங்
கருவிசைப் பகற்றுந் திருவிசைப் பாவுந்

ஐவகைச் சுத்தி—பூதசுத்தி முதலியன.

தொல்லாண் டவர்புகழ் பல்லாண் டவையு
மின்ன தன்மைய ரியலிசைப் பாடலு
மோதி யுணர்ந்த மூதறி வாளர்
பண்ணுந் திறனு மெண்ணினர் பரவ
நூற்பல தெரிந்த நாற்கவி ராசர்
ஐந்தமிழ்க் கடலிற் சிந்தைமத் தெறியா
வெடுத்திடு மமுதிற் றொடுத்தசெந் தமிழாற்
பலமுறை புகழ்ந்து நிலமிசை வணங்க
வகலிடம் புரக்கு நிகரிலா வேந்தர்
பசும்பொன் மாரி விசும்பினி லிறைத்துச்
சேவடி பரவிப் பாவனை கூடித்
தாந்தமை யுணராச் சாந்தமுற் றிறைஞ்ச
மாநிலம் போற்று மேனை யடிய
ரென்பு நெக்குருக வன்பொடு குழீஇ
யுன்பணி கொள்ளென முன்பணிந் திறைஞ்சத்
திரைபொரு காவிரிக் கரையினி லோங்கிய
மருவிய தருமைத் திருநக ரதன்கட்
டெள்ளொளி விரிக்கும் வெள்ளி மால்வரை
தென்றிசை யெழுந்து நின்றது வென்ன
வெயிற்றிர ளெழூஉமணி குயிற்றுமண் டபத்தின்
கருங்கட லுலகங் கண்டுகண் களிப்பப்
பெருங்கொலு வெய்திப் பிரதாப முற்றிருக்குந்
தவஞான கோடிமார்த் தாண்ட னெனவரு
சிவஞான தேசிகன் றிருவரு ளாலே
யாணவ திமிர மகற்றிக்
காணமுன் னிற்குங் காட்சி யோனே. 8

மார்த்தாண்டன்—சூரியன். திமிரம்—இருள்.

வெண்பா.

காட்சிக் கரிய கடவுள் கருணையே
பூட்சியெனக் கொண்டடியேன் போக்ககற்றி—யாட்சிசெய்த
தென்கமலை மேவுஞ் சிவஞான தேசிகனே
யென்கமலை வுண்டோ வினி. 9.

கலித்துறை.

இனியேன் பிரம னிருந்தேன் மறலி யினியகன்னல்
முனியே னனங்கற் குலகினி லேன்முறை மூதுயிர்க்குத்
துனியே னனைக்குத் தொழும்பே னொருவர்க்குச் சொல்லேனக்குத்
தனியேன் மதுரைச் சிவஞான தேசிகன் றுளுறவே. 10

விருத்தம்.

வேலடுத்த விழிமடவார் வெங்காமத் திடைச்சிலந்தி விசித்துச் சிக்கும்
நூலடுத்த வேட்டுவன்போல் வாட்டமுறு துனதருட்க ணோக்க நல்காய்
சூலடுத்த மழைமுகில்போற் சுரும்படுத்த மலர்ச்சோலை சொரியுஞ் செந்தேன்
காலடுத்த வயற்றருமைச் சிவஞான தேசிகனே கருணை வாழ்வே. 11.

---

9. பூட்சி—கொள்கை. என்க—என்று துதிக்க.
10. துனி—துன்பம், வருத்தம். அநங்கன்—மன்மதன். அனை—அன்னை, இடைக்குறை.
11. சிலந்தி—சிலந்திப்பூச்சி. விசித்து—கட்டி. வேட்டுவன்—குளவி. சூல்—கரு. சுரும்பு—வண்டு. கால்—வாய்க்கால்.

அகவல்.

வாழ்வினை யுன்னி வேள்விக ளுஞற்றித்
தானவர்க் கடிந்து வானவர்க் கிறையாய்
ஐந்தரு நிழலி லலைகட லுதித்த
இந்துவின் வதனத் திளநகை யணங்கின்
நீங்கருங் காதலி னிறைகட லழுந்திக்
கோங்கரும் பனைய குவிமுலை வருடி
நவமணி குயிற்றுந் தமனியத் தவிசிற்
பேரத் தாணியி னுர்வமுற் றிருக்கு
மிந்திரன் முதலியோ ரந்தமி லின்பமும்
பன்னீ ராட்டைப் பருவமுற் றமர்ந்த
வன்ன மென்னடைக் கன்னிய ரன்புற
வெண்ணிரண் டாண்டி னெழில்பெறும் பருவ
நண்ணினர் பசும்பொன் னுவற் றீங்கனி
வளந்தரு நதியின் வருமமு தருந்தி
யுளந்தளர்ந் துவட்டா துலப்பில் காலம்
போக பூமியிற் பொருந்தின ரின்பமும்
அனந்தன் பரித்த னனந்தலை யுலகின்
மிகைத்தெழுங் கொடிய பகைத்திறங் கடிந்து
திறையினி தளப்ப முறைபுளி வழாஅ
திறைப்பொருள் வெளவி யறத்துறை காத்துந்

---

12. வேள்வி—யாகம். தானவர்—அசுரர். ஐந்தரு:—கற்பகம், பாரிசாதம், மந்தாரம், சந்தனம், அரிசந்தனம். இந்து—சந்திரன். வதனம்—முகம். அணங்கு—தெய்வமகளிர். தமனியம்—பொன். குயிற்றும்—பதித்த. அத்தாணி—கொலுமண்டபம். பன்னீராட்டை—பன்னிரண்டுவருடம். உலப்புஇல்—அழிவுஇல்லாத. அனந்தன்—ஆதிசேடன். திறை—கப்பம்.

தேறிய வங்க மாறினு மீறில்
பொருள்பெற வேண்டி யருள்பெற வருத்து
மைம்புல னுக்கு மின்பப் பகுதியிற்
காண்டகு நிதியம் வேண்டுவ தளித்துந்
தண்சுடர் பரப்பும் வெண்குடை நிழற்றத்
தாழ்குழன் மடவா ரூழ்முறை யெடுத்துப்
பொருவருங் கவரி யிருமருங் கிரட்ட
வரியினஞ் சுமப்ப விரிகதிர் பரப்பு
மேதகு தவிசின் மீதுவீற் றிருக்குங்
கொன்னிலை வடிவேன் மன்னர் வாழ்க்கையு
மிவைமுத லுலக நவையில் செல்வமும்
வெம்பிக் கொதிக்குங் கும்பி பாகமும்
வெறுத்திடு மனலின் வறுத்திடு மணலுங்
கட்புறத் துறுத்து முட்புறத் திலவும்
வெப்புற் றழலுஞ் செப்புக் கனியு
நெருப்பினிற் றதும்ப வுருக்கிய வங்கமுந்
தண்டோட் டுண்டெழு துண்டக் கழுதுந்
தழற்பிழம் புருவக் கழுக்கடைக் கோலு
மேங்கிமெய் பதற வேங்கை பாய்தலுந்
தசைபறித் துண்ணத் திசையெழு ஞாளியும்
மருளின் வலம்வரூஉ மிருளின் வட்டமும்
ஊசித் துதிக்கை மூசி வட்டமும்
நீளுடல் நடுக்கு மீளைக் கிணறும்

அங்கம்—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண். பொருவரும்—ஒப்பற்ற. அரி—சிங்கம். கொன்—அச்சம். வடி—கூர்மை. வங்கம்—ஈயம். கும்பிபாகம்—நரகவிசேடம். தண்தோடு—கழுத்தில் தொங்குமுறுப்பு. கழுக்கடை—சூலம் (கழுமரம்).ஞாளி—நாய். மூசி—ஓர்வகைப் பூச்சி. ஈளை—கபம்.

அருவருப் பெய்த வருமலக் கிணறும்
உடன்முழு தழுத்துஞ் சுடுவனக் கிணறும்
நெய்யிற் பொரிக்கும் வெய்ய தாழியு
§மின்னவை முதல முன்னக னழலின்
மேலெழு நரக நாலெழு கோடியின்
வரு தழுத்து மாறுத் துன்பும்
வெய்யவன் விடுசுடர் கைபரந் தெழாஅப்
புற்றரு முதலிய பற்பல பொருளின்
மெய்கண் டறியார் தைவந் தீதெனத்
தேர்தரத் திரண்ட காரிருட் புவியும்
மாகத் துலவாக் காகத் துண்டரும்
பொருக்கெனக் குதிக்கு மொருக்கான் மாந்தரு
முருவே றுய பரிமா முகரும்
பற்றத் துணையி லொற்றைக் கையரு
மோருரு வதனி லீருரு வாய
வித்திற னன்றி யெத்திறத் தவரும்
ஆறுசென் றேற வேறிட மின்றிக்
கிணத்துட் டவளைக் கணத்தினைப் பொருவப்
பிற்பட வுகைக்கும் பற்பல தீவின்
கிழங்கொடு சருகுந் தழைந்திடு மடகுந்
தூரா வயிற்றிற் காரா வாகி
ய நம்பசி கதுவ வருந்திய துயரும்
நிறையத் திறவாப் பிறவிக் குருடும்
அடைத்த வடிவன்றிப் புடைத்தெழு கூனும்

---

§இன்சுவை யென்றும் பாடம். வெய்யதாழி—கொடியமிடா. வெய்யவன்—சூரியன். காகத்துண்டர்—காக்கை மூக்கையுடையவர். ஆறு—வழி. அடகு—இலை. ஆரா—நிரம்பா. கதுவ—வருத்த.

இடித்தெழு முழக்குந் தடுத்திடு செவிடுங்
கரமுத லுறுப்பா லுரைசெயு மூமையும்
பழுக்குடர் சுருட்டி யிழுத்திடு சூலையும்
நீடுயர் தாழி மாடுய ரகடும்
இழிந்தூ னுதிரம் வழிந்திடு தொழுனோயு
முற்றிய வுடலம் வற்றிய கயமும்
மற்றெழு நோய்கள் பற்றிய விடும்பையுங்
கானற் பரக்கும் வேனிற் காலமும்
வானைக் காணுச் சோனைக் காலமு
நளிருரை நடுக்குங் குளிர்பனிக் காலமும்
உடற்றுவெம் பசியாற் றடக்குண் டெழுந்தே
ஊசியிற் பணித்து மாசினிற் பிதிர்ந்த
குடங்கையி னளவாம் படந்தனை விரியா
வின்னலைத் தணிப்பான் வெந்நிடைப் போர்த்துத்
தரும்பலி கொள்ளக் கருங்கல னேந்தித்
தன்முகங் காண்போ ரின்முக நோக்கிப்
பையச் சென்று மெய்யகங் குழைந்து
வெறுத்துரை யாடினு மறுத்தெதிர் மொழியா
தகடு தூர்க்கப் பகடெனத் திரியும்
நல்குர வாளர் பல்குறைத் துன்பமுஞ்
சொற்றன வன்றி மற்றைய விடும்பையுங்
கொடுப்ப தன்றித் தடுப்ப தரிதா
மிருவினைப் பயனும் பொருவரு நிலத்தின்
வேதனை மடுநெடு வென்ப தமைத்து

அகடு—வயிறு. தொழுனை—தொழுநோய், குஷ்டம். கயம்—க்ஷயம். சோனை—மழை. மாசு—அழுக்கு. பிதிர்ந்த—கிழிந்த. படம்—வஸ்திரம். வெந்—முதுகு. கருங்கலம்—மண்பாத்திரம். பகடு—கடா. நல்குரவு—வறுமை.

வாரண முகத்தோ னாரணக் கிழவன்
நாரணன் முதலிய காரணக் கடவுளர்
திருவுருக் கொண்டு வரன்முறை யமரும்
ஆயத் தெழுந்த காயத் தேரின்
உற்ற பொருளைப் பற்றி யமர்ந்து
நில்லா வாசைக் கல்லா மாவை
யானென தென்னு மிருவகைப் பற்று
மான முற்ற வாகையிற் பிணித்து
மெய்ம்முதற் பொறியா மைவகைக் களிற்றின்
உட்குவரு மோக முட்கோ லேந்தி
மனமெனும் பாகன் றனையினிற் செலுத்த
முன்வலி யோடு தன்வலி தடுக்கும்
நவைசெய் மலமாங் கவசம் புனைந்தே
யொன்றினொன் றொவ்வாத் துன்றுமைம் புலனுந்
தம்பணி புரியு மைம்படை யாக
முரணிய குணமொரு மூன்றுந் தம்வழி
யரசனை நடாத்து மமைச்ச ராக
மூன்றிரண் டென்ன முறைபெறு மவத்தை
யேன்றுயர் மணிக்குற டெய்தி யமரா
வளவில் கால மதன்வழிச் சென்றே
யுளமெலிந் திடர்பல வுற்றன னொருகால்
இன்ன லுற்றோன் றன்வசத் தன்றி
யீசனை யொருகாற் பேசுவ தேய்ப்ப
வள்ளல் தன்பத முள்ளிய தவத்தால்

காயம்—சரீரம். ஐவகைக்களிறு—மெய், வாய், கண், மூக்கு, செவி யாகிய யானைகள். நவை—குற்றம் மூன்றிரண்டவத்தை—சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீத முதலியன.

என்னிடத் தெய்தி யிருமதி நெடுந்தேர்
தன்னைவிட் டெடுத்துத் தனக்கிணை யில்லா
வோரடி வீட்டி னுவந்தினி திருத்திப்
பெருகா னந்தம் பருகத் தேக்கி
யசைவற் றிருக்க வருள்விழி பெறுவோன்
கடலைல குறங்கு மிடையிரு ளுணராக்
கவையடிச் செங்கட் குவிமுலைக் காரான்
இணைமருப் பதனாற் கனைவொடுற் றெறிந்து
வேழக் காடு தாழத் துவைத்து
வாலிய கதிர்ச்செஞ் சாலி கறித்து
நெடுமுகட் டகட்டுப் படுகரை நிரப்பித்
தேனுண் டிசைக்குந் தேன்கண் வளருங்
காவிக் கமல வாவியிற் புக்கு
விலங்கு வீழக் கலங்கிய வாளை
வெடிபோய்ச் சோலை முடிமீ துறங்குங்
கருவிரன் மந்தி வெருவிக் குதிப்பப்
பொழியு மலர்த்தேன் வழிபுகும் வண்மை
மாநக ரென்ன வரம்பெறு கமலை
நாநலந் தருசிவ ஞான தேசிகன்
நலந்திகழ் மாதவர் நாடும்
பலம்பெறு கயிலைப் பனிவரை யோனே. 12

வெண்பா.

வரையா மறையால் மதிவா னவரா
லுரையாப் பொருளா மொருவன்—றரைமீது

என்னிடத் தெய்தி யிருமதி நெடுந்தேர்—தன்னை இதுகாறும் என்னிடத்திலிருந்து அகலாமலிருக்கிற தற்போதமாகிய பெரிய தேரினின்றும். ஓரடி—ஒப்பற்ற திருவடி. கவையடி—பிளவுபட்டவடி. காரான்—எருமை. வெடிபோதல்—பாய்தல். கமலை—திருவாரூர். பனிவரை—இமயமலை. 13. வரையா—எழுதப்படாத.

தென்னன் மதுரைச் சிவஞான தேசிகனே
யென்னவெனை யாளவந்தா னின்று. 13

கலித்துறை.

இன்றைக் கெனக்கு நுமக்குந் தொடர்ச்சி யிருவினைகாண்
மன்றற் பதுமத் தடஞ்சூழ் கமலையின் வள்ளல்செம்பொற்
கொன்றைத் தொடையன் சிவஞான தேசிகன் கூர்ந்தவருள்
நன்றைப் பெருகுவ னீர்வேறு வேறினி நானுமன்றே. 14.

விருத்தம்.

நானென தென்னு மிருவகைப் பற்று
 நவைதடிந் தலகினு லாய்ந்து
மோனமுற் றகில வுலகினுக் கெல்லா
 முழுமுதற் காரணப் பொருளை
யானெனக் கருதும் பாவனை கூட
 வென்சிரத் துன்னடி தரிப்பாய்
தேனல ரிதழி புனைசிவ ஞான
 தேசிக தருமையந் தருவே. 15

அகவல்.

தருவொடு மணியு மிருநிதிக் குலமுங்
கருதிய தளிக்குங் காம தேனுவும்
அந்நிதி படைத்த மன்னியோர் வாழ்வும்
வாழ்வின் பேறங் கூழ்முறை தோன்றவுந்

---

14. மன்றல்—மணம். அன்று, ஏ. அசைகள்.
15. மோனம்—மௌனம்.

தோன்றிய பொருளே யேன்றுகொண் டளிக்கவும்
அடைவினி லமர்ந்த கடவுளர் பதமு
மாகிய சின்னாட் போகமு மஃதான
றுரையு மனமு முருவுங் குணமுங்
கரையும் பொருவுங் காலமுங் கடந்த
வளவி லானந்த வளமலி செல்வமும்
நேர்பெறு கருணை நடைக்கட் புரிய
வருள்வடி வெடுத்த கருணையங் கடலே
யளியினங் கவராத் தெளிதரு தேனே
அலைகட லெழாது நிலைபெறு மமுதே
மலர்முகங் காயா திலகுசெங் கனியே
சொற்கணத் தடங்கா நற்குண வரையே
தவாதமு தொழுகு முவாமதி முகத்தோய்
அருமைப் பொருளே தருமைப் பதியாய்
மதிதவழ் புரிசைத் துதிதவழ் கமலை
மாநகர் வருசிவ ஞானதே சிகனே
யுன்பதம் பரவி யென்சொல்விண் ணப்பம்
ஓதுவ தொன்றுள தியாதெனக் கேண்மோ
அருளில ஞதன் மருளறி வுடைமை
கற்றவர்க் கடிதல் சிற்றினஞ் சேர்தல்
நடுநிலை தவிர்த லடுகொலை புரிதல்
இன்மொழி விடுத்தல் புன்மொழி தொடுத்தல்
அறங்கூ றுமை புறங்கூ றிடுதல்
மெய்ப்பொரு டணத்தல் பொய்ப்பொருண் மணத்தல்
நன்றி மறத்தல் வென்றி யிழத்தல்
அயல்மனை விழைத லியல்வது கரத்தல்

---

16. அளி—வண்டு. சொற்கணம்—சொற்கூட்டம். புரிசை—மதில்.

இழிதொழில் புரிதல் விழுமிய வெறுத்தல்
பெரியோர்ப் பிழைத்த லுரியோர்ச் செறுத்தல்
வஞ்சனை பயிற லஞ்சலஞ் சாமை
வேறுறக் காண்டல் மாறுற வுரைத்தல்
மானந் தீர்தல் தானந் துறத்தல்
பெருமித மின்மை தருமட மிலாமை
யொழுக்கந் தவிர்தல் பழிக்குள மகிழ்தல்
வாய்மை மறுத்தல் தீமை யுணர்த்தல்
படிவம் பழித்தல் குடிவம் புரைத்தல்
கூடா வொழுக்கந் தேடா தழித்தல்
குரவரைப் பிழைத்த லிரவலர்க் கடுத்தல்
அழுக்கற் றிணைத லிழுக்கினுக் கேன்றல்
பொய்யுரை புகறல் கையர்பின் சேறல்
பிறன்பொருள் கவர்த லறன்கடை நிற்றல்
ஈங்கிவை முதலிய தீங்குறு குணங்கள்
யாவையு மென்பால் மேவுத லன்றி
யடாது வென்னப் படாது வன்றே
யாயினு மென்னைத் தூயமா தவரோ
டாண்டருள் புரிய வேண்டுவ துளதே
விடங்கொப் புளிக்குங் கடுங்கண் ணரவுந்
தெவிட்டுறு வமுத முவட்டெடுத் தொழுகும்
பனியிள மதியு மினிதணிந் தனையால்
வெறுத்தெனைக் கடித லறத்துறை யன்றே
அதனால்
மாட்சியிற் றெழும்பு வேண்டி
யாட்சிகொண் டென்று மருள்வதுன் கடனே 16.

பெருமிதம்—பெருமை. தருமடம்—கொடைமடம். கையர்—அற்பர்.

வெண்பா.

கடனமல மாமுன் கமலபதங் கண்ட
வுடன்மிடி தீர்த்தாள்வ தோரா—விடமகலாச்
சீர்வைகைக் கூடற் சிவஞான தேசிகவென்
பார்வையென வந்தாள்பண் பால் 17.

கலித்துறை.

பண்கொண்டு மூவர் திருவாய் மலர்தமிழ்ப் பாவமுதத்
தெண்கொண்ட நின்செவிக் கென்கவிப் புன்சொலுமேறிடுமோ
கண்கொண்ட கண்மணி யென்ன விளங்கிக் கமலைவைகும்
வண்கொண்ட லொத்த சிவஞான தேசிக மாமணியே 18.

விருத்தம்.

மணியென வருள்சிவ ஞான தேசிகன்
வளமலி தருமையின் வாழு நாயகன்
அணிகிள ரிணையடி யான தாமரை
யலரடி யவர்முடி மீது லாவுவ
பணிபவர் செவிகளி லோகிரு பாநிதி
பகர்தரு மொருமனு வேநி லாவுவ
தணிவொடு மவனடி நீழல் நாடினர்
தமையிமை யவர்தொழ வாழ்வு மேவுவ 19.

---

17. அமலம்—மலமற்ற. ஓர்—திருவுள்ளம் பற்றுவீராக. ஆல்-அசை.

18. எண்கொண்ட—மதிப்புக்கொண்ட.

19. ஒருமனு—திருமந்திரம், பஞ்சாட்சரம்.

அகவல்.

மேதினி படைக்க விளங்குசெங் கமலப்
போதினி லமர்ந்த புத்தே ளளித்த
குறுமுனி செங்கையிற் கொண்ட குண்டிகை
பெறுசூன் முதிர்ந்து பெட்புட னுயிர்ப்பக்
குடதிசைச் சையக் குலவரை யென்னுஞ்
சுடர்விடு நவமணித் தொட்டி லமர்ந்து
வேயின முகுத்த வெண்ணித் திலமுங்
காய்களிற் றுலவைக் கதிர்மணித் தரளமும்
பணியினங் கான்ற பன்மணிக் குவையும்
அணிபெற வகுத்த வலங்க லணிந்து
குனிதிரைக் கரத்தாற் கொழித்தபொற் றுகளைப்
பனிவரைப் படுத்த பாறையிற் பரப்பிச்
சாரற் சாந்தத் தண்குற டுரைஇ
யாரத் தேய்வை யகமுழு தணிந்து
மரகதங் குழைத்து வயிரக் காம்பிற்
புரையற வமைத்துப் பொற்சூழ் போக்கிச்
செய்வினை மாக்கள் சிந்தித் தியற்றுங்
கைவினைப் படாஅக் கலாப மேந்தி
யிறையவ ருலகிற் கேணியிட் டன்ன
அறைதிகழ் சார லாங்கிற் றவழ்ந்து
செந்தே னுண்டு தேக்கெறிந் துயரிய
பைந்தா மைச்செம் பழக்குலை மோதி
வெண்கதிர் விரிக்கும் வெள்ளித் தகட்டுத்
தண்குருத் தரம்பைச் சாறு சாயத்

---

20. குண்டிகை—கமண்டலம். வேய்—மூங்கில். நித்திலம்—முத்து. உலவை—யானைத்தந்தம். பணி—பாம்பு. அலங்கல்—மாலை, ஆரம்—சந்தனம். தேய்வை—சாந்து. தேக்கெறிந்து—திகட்டுத லடைந்து. அரம்பை—வாழை.

துடர்பட வடுக்கித் துன்னிய துறுக
லிடையிடைக் குறுநடை யிட்டுமெய் யசையா
வளவ னாடு மாதவ மியற்ற
அளமலி கீழ்க்கட லரசிளங் குமரன்
அலைநெடுங் கரத்தா லசைத்தனன் விளிப்பப்
பஃறுளி சிதறப் பரந்தெழு கொண்மூத்
தொகுபெய றாங்குஞ் சூழ்வரை நாட்டின்
நடைபல பயின்று நானில மீது
படர்தரு மடந்தைப் பருவ முற்றுக்
கவின்மிகப் பெருகப் பெருகிய காவிரி
செவிநிறைந் திடுமிசைத் தேனின முரல
விறற்கை வெள்வேல் வேலனைப் பரவக்
குறச்சிறூர் குழூஉங் குறிச்சி நீங்கிக்
கலிகெழு களத்துக் காளைய ரெறியும்
பலிகவர் கன்னிப் பாலை கடந்து
வளைமுறி வெண்டயிர் மத்தெறி யோதைவிண்
ணளவிய முல்லை யகனிலந் தணந்தே
யேதமில் புனனா டெனுந்தூழ விக்கலை
மோதிரு கோடெனு முலைக்கண் டிறவா
விருபா லகத்து மெழுபுன லென்னும்
வருபா லூட்ட மருத மெய்திக்
கருஞ்சேற் றகனிலக் கழனியி னளவும்
பொருஞ்சேற் கமலப் பொய்கையி னளவு
மோதை வெள்ளத் தோசையி னளவுஞ்
சீத மணிநீர்த் திரைமடு வளவும்
மறிகயற் குவளை வாவியி னளவும்
எறிதிரை சுருட்டு மேரியி னளவும்

துறுகல்—நெருங்கியகல். கொண்மூ—மேகம். முரல—ஒலிக்க.

அகனக ருடுத்த வகழியி னளவும்
மிகுகுறை வின்றி வினைவழிப் படூஉம்
உடம்பி னிலமரு முயிரெனக் கூறு
மிடந்தொறு மிறைக்கு மெழிற்சோ ணாட்டு
மகர ராசி வருகற் கடகப்
புகர்சேர் ராசி பொருந்துத லானும்
மீன்பல செறிந்து விளங்குத லானும்
வான்பயில் செம்பொன் மருவுத லானும்
நாடுதற் கெட்டா நாண்மதி யொடுபொரூஉம்
கோடுடைத் தாய கொள்கை யானும்
அருஉ வளஞ்சே ரகத்தி னானும்
தருகல னெனப்புயல் தவழ்த லானும்
சூழ்குழன் மடவார் துணைமுலைக் கோட்டின்
கேழ்கிள ராரங் கிளைத்த லானும்
குலவிய தரங்கக் குமிழி யென்னப்
பலமுகை யரும்பும் பண்பி னானும்
வெண்டல நுரையென விண்ணுல கதன்மேற்
கொண்டலர் நறும்பூங் கொத்தி னானு
மாசை யெட்டி னமர்தரு பறவை
மூசிய தொழுதி முழக்கத் தானும்
நண்ணிய பசும்பொன் னவமணி ராசி
பெண்ணியல் முறையகன் றிருத்த லானும்
ஊர்கோண் மதிய முதித்திட வொலிக்குங்

மகரம்—ஓர் இராசி, மீன். கற்கடகம்—ஓர் இராசி, நண்டு. புகர்—சுக்கிரன், செம்மை.மீன்—நக்ஷத்திரம், மீன். செம்பொன்—பிருகஸ்பதி, செம்மையானபொன். கோடு—மரக்கொம்பு, கொள்ளுதல். கலன்—மரக்கலம்.கேழ்—நிறம். ஆசை—திக்கு. தொழுதி—கூட்டம். ஊர்கோள்—பரிவேடம்.

கார்கோ ளன்ன காமர்பூஞ் சோலை
யெண்டிசை யளாவுந் தண்டமிழ்த் தருமை
மருவிவீற் றிருக்குங் கருணை வாரிதி
கற்றவர்க் கருளுங் கனக மாமுகில்
நற்றவர் பணிசிவ ஞான தேசிகன்
மன்னிய மலரடி வணங்கா
வென்னையு நிலமிசை யிருத்தியாள் பவனே 20.

வேண்பா.

ஆளா யவர்பொன் னடித்தா மரைபரவி
மீளாப் பணிபுரிய வேண்டினேன்—கேளாதே
தென்னூர் வந்த சிவஞான தேசிகனே
யென்னுனு நின்னடியார்க் கே 21.

கலித்துறை.

அடியார் வழுத்த முடியாநின் செம்பொன் னடியிணையென்
முடியா தரிக்கமுன் னெத்துணை மாதவ முற்றியதோ
வொடியாக் கருணைச் சிவஞான தேசிக வோங்குகடற்
படியாளக் கூடற் பதிவாழ்வு கொண்ட பரம்பொருளே 22.

விருத்தம்.

பரமிதென வூனுதிரம் பரந்துதீ நாற்றமுறும் படுகு ழிக்கே
நிரவதிக வாசையுற்று நின்னுதடு மாறுத நிலைமை நல்காய்
அரகரவென் றிடுமோதை யமருலகம் புகுந்தருமை யன்பர்
வேண்டும்
வரமுதவுஞ் சிவஞான தேசிகனே யுயிர்க்குயிராய் மருவுந்
தேவே 23.

கார்கோள்—சமுத்திரம்.
22 ஒடியா—நீங்காத.

அகவல்.

தேவ ருலகின் மேவின தரூஉ
மைந்தரு வுலகின் வந்தன வென்னப்
பொன்னுந் தாளமுஞ் சென்னிறப் பவளமுங்
கரப்ப தின்றிப் பரப்பி யெழூஉம்
மேகந் தவழு நாகஞ் சூழ்ந்த
மாட வீதிக் கூடற் றலைவ
கதிர்த்திரள் கோடி யுதிப்பினு மிரியாப்
பாயிரு ளென்னப் படர்தரு மவிச்சை
யாயிடை யலம்வரு மாருயிர்க் கெல்லாம்
பேரொளி காட்டுங் காரண மாக
வருமறை நான்கு மறியா வருளின்
றிருவுரு வெடுத்த சிவஞான தேசிக
மூதறி வளிக்கு மாதவர்க் கிறைவ
வெஞ்சா தெளியே னெய்து மின்னற்
கஞ்சே னின்செயற் கஞ்சுவன் கேண்மதி
வெண்ணிய விருநூற் றெண்மூன் றென்னக்
கண்ணிய புவனங் கழக மாகத்
தாவா தூழிற் றள்ளும் நாற்கதி
மேவா விரித்த வீதி யாக
நாற்பதிற் றிரட்டிநா னன்கென் றெண்ணின்
பாற்படு கருவி பயிலறை யாகப்
பேறிழ வின்பம் பிணிமூப் பிறத்தல்
ஆறு பொறிகோண் மாறு விருவினை
மறியப் புரியு மெறிகவ ருகக்

---

24. எரியா—நீங்காத. அவிச்சை—அஞ்ஞானம், அறியாமை. கழகம்—இடம் (சூதாடுமிடம்). நாற்கதி—தேவகதி, மனுஷ்யகதி, நரககதி, விலங்குகதி, கவர்—சூதாடுகருவி.

காரு வண்ணங் காட்டு மாணவ
மாறு நீல மணியுழக் காக
நண்ணிய நால்வகைத் தோற்ற மென்னும்
வண்ண மெய்தி வருமுயிர் சூதாய்ப்
பொருந்திய வருளொடு பொழுது கண்படா
திருந்தனை விளையாட் டியற்றுங் காலைச்
சூதெனச் சுழலும் பேதமை யுடையேன்
ஏமஞ் சேர்ந்து மிணையுற் றிருந்தும்
ஈமஞ் சேர்ந்து மிமைப்பினிற் பிறந்தும்
வேறல் புரிந்தும் வீழ்நாட் பட்டுங்
கோறல் புரிந்துங் கோறலைப் பட்டுஞ்
சொல்லிய வன்றிக் கல்லிற் கிடந்தும்
அலகில் கால மருவரை யுச்சியின்
உலவைக் கறங்கி னுழன்றன னாக
விருவினை யொப்புவந் தெய்திப் பழுத்துப்
பெருமை வீடு பெற்றோ னாக
விரிந்த தொழிலான் வருந்திலை யேனுமின்
றாளா மடியேற் காக
வாளா திருக்கும் வரமினி தருளே 24.

வெண்பா.

அருள்வேண்டிச் செம்பொன் னடிநிழற்கீழ் வைகும்
பொருள்வேண்டி யாழிப் புவிமேற்—றெருள்மனமே
தென்றருமை வாழுஞ் சிவஞான தேசிகனே
யென்றருமை யந்தவிர வே. 25.

நால்வகைத்தோற்றம்—அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம். வேறல்—வெல்லுதல். கோறல்—கொல்லுதல். ஈமம்—சுடுகாடு.
உலவைக்கறங்கு—காற்றூடி. 25 ஐயம்—சந்தேகம்.

கலித்துறை.

தவிராத செல்வந் தரும்பா தலமைந் தருவுலகும்
புவிதானும் வேண்டிலன் யான்வேண்டுவது புனைமணிகள்
அவிர்மாடக் கூடற் சிவஞான தேசிக னன்புறுசொற்
செவிமா தவர்தம் மடியார் பரிகலச் சேடத்தையே 26.

விருத்தம்.

சேடனெனப் பேர்பெற்று னின்னறிவிற்
சேடிக்குந் திறத்தி னென்றால்
நாடரிய வுனதுகல்விப் பெருமையினை
நான்முகனு நவிற்ற லாமோ
மாடமலி மதிட்புரிசைக் கூடல்வளம்
பதிக்கரசே மதுரச் செஞ்சொற்
காடவர்கோன் பாடல்புனை சிவஞான
தேசிகனுங் கருணை வாழ்வே 27.

அகவல்.

வேள்விய ரியற்றும் வேள்விச் சாலையு
மாதுலர்க் கருத்து மன்னச் சாலையு
சொல்வித் தகர்பயில் கல்விக் கழகமு
மேதகு விபஞ்சி வீணை மாடகத்
தாதியா ழிசைக்கு மம்பொற் கூடமும்
மதிநுதன் மடவார் மணிமுழ வதிரச்
சதிபெற நடிக்குந் தமனிய வரங்குங்
கண்கவர் வனப்பிற் கம்மிய ரெடுப்ப

---

27. காடவர்கோன்—ஓர் சிற்றரசன். இவன் பேறுபெற்ற வரலாற்றை 40-வது செய்யுளிற் கண்டு கொள்க.
28. விபஞ்சி, மாடகம் இவை யிங்கு யாழ் விசேடத்தை யுணர்த்துகின்றன.

விண்கவர் நெடிய விமானசோ பானமுங்
குலமணி செற்றுபு குயிற்றிவா னுறுகோள்
வலம்வர வுயர்ந்த மணிக்கோ புரமும்
பணிமொழி மடவார் பாங்கறிந் தாட
வணிநிலா வெறிக்கு மரமியத் தலமுங்
கன்னியர் நீலக் கழங்கெடுத் தாடத்
துன்னிய பசும்பொற் சுவர்ச்சூ ளிகையும்
பிறங்குசெம் பவளப் பித்திகைப் புறத்தின்
நிறந்தரு வயிர நிலைத்தூ ணிறீஇ
விளங்கிய மரகத விளிம்பு போற்றி
வளம்பெறத் தபதியர் வகுத்தபொன் மாடமுங்
குழைபடு பன்மணிக் குழம்பிற் றீட்டி
விழைதரு மோவிய மேவிய தெற்றியும்
மின்படு பீடிகை வெவ்வே றமர்ந்த
மன்பதை யோதை மாறு மன்றமுஞ்
செய்வினைத் தொழிலாற் றிறமுற வெறிநூல்
மையற விளங்கு மணிமா ளிகையுங்
குளிதிரை யெறியாக் குளிர்தட மென்னப்
பனிதரு பளிக்குப் பாறை படுத்தி
நேரிதிற் றுகிர்கா னிறீஇ மடவார்
மூரற் பொரூஉ முத்தின் பந்தரும்
மலையுங் கடலும் வனமும் நாடும்
நிலைபெறத் தரூஉ நிதிபது பனமும்
தொகுபன் மாக்கள் தொன்மரத் தமர்ந்த
சகுன மென்னத் தத்தமின் மாறு
வுரைதரு மோதை யொலிகட லென்ன

சோபானம்—படி. சூளிகை—மாளிகையினுறுப்பு. பித்திகை—சுவர்.
மூரல்—பல். பதுபனம்—திசைச்சொல், மதுவனம்—தேன்பொழில்.

வரவ மாறு வாவண வீதியும்
மறுவிலா மறையின் மரபுளி வழாஅ
வறுவகைத் தொழில்புரி யந்தணர் வீதியும்
எழுவுறத் தழுவின ரெறியுந் துறுகல்
முழவுறழ் திணிதோண் முறுகப் புடைத்து
விற்படை பயின்றும் விதிர்த்தனர் சுழற்றிப்
பற்பல வாள்வேற் படையெதிர் பயின்றும்
பண்ணமைப் பரியும் பாய்மதக் களிறும்
மண்ணிய நவமணி வரைநெடுந் தேருங்
கருதிக் காணுநர் கடைப்புறங் கதண
விரைவிற் செலுத்தும் வேந்தர் வீதியுங்
காண்டகு கலத்திற் காலாட் சும்மையிற்
பாண்டிலிற் பகட்டிற் பாற்படு பண்டங்
கோடற் கண்ணுங் கோட்படு பொருளை
வீட லெண்ணி விற்றற் கண்ணும்
பேணிப் பிறர்பொருள் தம்பொரு ளென்ன
வாணிகம் புரியும் வணிகர் வீதியும்
இம்மையி னீட்டு மும்மைப் பொருட்குங்
காரண மென்னு மேரி னுழுதொழில்
கைதூ வாது செய்தூழ் விளைவித்
தீண்டிய விரவல ரெத்திறத் தோர்க்கும்
வேண்டிய தரூஉம் வேளாண் வீதியும்
விலைகண் டின்பம் விளைப்பவ ருளத்தின்
நிலைகண் டறியா நிறைநீர்க் கிடங்கும்
வாயிலும் பொறியு மறைந்தெழு ஞாஞ்சிலுங்
காய்கதி ரிரவி காந்தத் தமையா

ஆவணம்—கடைத்தெரு. கதண—பிரகாசிக்க. பாண்டில்—வண்டி.
கைதூவாது—கைமடங்காது. ஞாஞ்சில்—மதிலுறுப்பு.

வேமஞ் சார்ந்த வெயிலி னாலும்
வாம மிக்க மாமதிச் சிலையால்
அயில்வேற் செங்கை பரிதிறற் காளையர்
பயில்தர வமைத்த பதனத் தானும்
நெருப்பர ணென்று நீரர ணென்றும்
வெருக்கொளத் தெவ்வர் விண்முக டளாவ
வாங்கெழு கொண்மூ வகடு கிழியா
வோங்கிப் பெருங்கொடி யுயர்ந்தபே ரரணும்
நீடிய செல்வக் கூடற் கிறைவ
கால மூன்றுங் கடந்தோ னென்ன
ஞாலம் புகழ்சிவ ஞான தேசிக
வென்னுடைச் செய்தி பன்னுவன் கேண்மதி
தெருட்டியு மறியாச் சிறியேன் வேலை
சுருட்டிய வலைவாய்த் துரும்பு போன்றுங்
கரைமரங் காணுக் கருங்கடன் முகட்டின்
வரையென நின்ற மரக்கலத் தொற்றைக்
கூம்பி னமர்ந்து கூவுத லொழியாத்
தீம்புகை வண்ணத் திகழ்கொடி போன்றும்
உள்ள மயங்கி யுலவாப் புன்கண்
வெள்ளத் தழுந்தி விடும்விர கிலியைப்
பொருட்படத் திருவுளம் புரிந்தே
யருட்கரை யேற்றி யாள்வதுன் பரமே. 28.

வெண்பா.

பரந்தந்த காரப் படலவிரு ணீக்கிப்
பரந்தந்த கண்குளிரப் பார்க்கும்—விரைந்தயன்மால்

கொடி—காக்கை. புன்கண்—துன்பம். விரகிலி—அறிவிலி

29 பரந்த அந்தகாரம்—பாவியவிருள், அகரம் தொகுத்தல் விகாரம்.

தேடுந் தருமைச் சிவஞான தேசிகனே
நீடு முயிர்க்குயிராய் நின்று 29.

கலித்துறை.

நின்றுவந் திக்கலர் தூவு மதனை நெருப்பிடைவைத்
தொன்றுவந் திக்க மணற்கூடை தாங்கிய வுண்மையென்னோ
வன்றுவந் திக்கரை யேவண்ணல் செய்ததென் றண்டர்குழாஞ்
சென்றுவந் திக்கச் சிவஞான தேசிக சின்மயனே 30.

விருத்தம்.

மயன்படைத்த தெனச்செழித்து வளம்படைத்த
 தருமைநகர் வாழ்வோ னென்னை
யயன்படைத்த வுலகமெலாஞ் சுழலாது
 தன்னடியார்க் கடியா னென்னும்
வியன்படைத்துச் செம்மாந்து வீற்றிருக்க
 வைப்பதற்கோ விண்ணோ ரெட்டாப்
பயன்படைத்த சிவஞான தேசிகனென்
 முடியின்மலர்ப் பதம்வைத் தானே 31

அகவல்

வைதிக மரபுளி யெய்திய மாமணத்
தூலகந் தொக்க குலவரை முகட்டிற்
குடங்கையிற் கொண்டு தடங்கடல் பருகுங்

---

30. இக்கு—கரும்பு. அலர்—புஷ்பபாணம். வந்தி—பிட்டு வாணிச்சி. அன்று வந்து இக்கரை அண்ணல் செய்ததென்று அண்டர் குழாம் வந்திக்க வந்திக்காக மணற்கூடை தாங்கிய உண்மை யென்னோ வென்று முடிக்க. வந்திக்கு, வந்திக்க எனநின்றது. ஒன்று-பத்தியினால் மன வொருமைப் பட்ட. இக்கதை திருவிளையாடற் புராணத்திற் கண்டு கொள்க.

31. மயன்—தெய்வத்தச்சன். வியன்—பெருமை.

குறுமுனி யெழுந்து குரைகழல் பரவ
மறுவறு செந்தமிழ் வாரியைப் புகட்டித்
தன்றுணை யில்லாத் தனக்கெதிர் தோன்றத்
தென்றிசைப் பொதியச் சிமயத் திருத்தி
யைந்தமி ழியலைச் செந்தமிழ் நிலத்திற்
பகுத்திட வருளி வகுத்திடு தமிழ்நெறி
மயங்கா வண்ண மலைமா னீன்ற
நயஞ்சேர் வள்ளி நாதனிற் றெளித்துந்
திங்கட் குலத்துத் தென்னவன் முன்னர்
சங்கப் புலவர் தம்முட னிருந்தும்
அருந்தமிழ் நூலி னருமை தோன்றத்
தருங்காப் பியப்பொரு டானே கரந்தும்
புலவரும் பொருளைத் தலைவனும் வேண்ட
வறம்பொரு ளிரண்டும் புறம்பென வொரீஇப்
பகுத்திடற் கரிய வகப்பொரு ளதனை
மறைக ளதனை மலர்மலர் வாயா
லிறைய னார்பொரு ளெனவெடுத் துரைத்தும்
மீனவ னுளத்து மேற்கோ ளதனைத்
தானறிந் திரக்குந் தருமிக் கருள்வான்
கூறிய தமிழ்க்குங் குற்றங் கூறி
யேறினர் சங்கப் பலகையி னிருக்குஞ்
சான்றோர் முன்னந் தமிழெனை தென்னு
வேன்றொரு புலவ னெனவெழுந் தருளித்
தோற்றிய பொருளியல் துணிந்திலர் புகலு
மாற்ற மறுத்து வண்டமிழ் நிறுவியுஞ்

---

32. தருமிக்கருள்வான் என்பது திருவிளையாடற்புராணம் தருமிக்கு பொற்கிழி யளித்த படலத்திற் காண்க.

சேரன் காண்கெனத் திருமுகந் தீட்டி
நேரிசைப் பாண னிதிபெற வீட்டியுங்
கண்ணுற் கருணைக் கடலிடை யாட்டி
யுண்ணு முலைப்பா லுவந்தினி தூட்டிப்
புல்லமண் கையர் புகுநெறி வீட்டித்
தொல்லுல கறியச் சூலை மூட்டியும்
மாண்டகு மணத்தின் மறையவர் கேட்ப
வாண்டவ னெனமுன் னுவணங் காட்டியும்
புதுமது வெனச்சொற் புணர்திருக் கோவை
யிதுபொரு ளென்ன வினிதிருந் தெழுதியும்
முந்திப் பதினெண் மொழியிற் சிறந்த
செந்தமிழ் வளர்த்த திறம்பிற பூமல்
மூன்றுறுப் படங்கு மூவகை நூலு
மான்றவற் றடங்கும் யாப்புட னணியுங்
கொடைபெறு புலவன் கூறிய வாற்றுப்
படைமுதல் வகுத்த பத்துப் பாட்டும்
அகமுதற் பொருளி னணிபெறும் யாப்பிற்
றொகைமுறை யறிந்தனர் தொகுத்தவெண் டொகையுந்
தொடுத்திடு மனுவிற் றென்மைப் பொருளை
யெடுத்துப் புகல்பதி னெண்கீழ்க் கணக்கும்
பெரும்பொருள் கவரைம் பெருங்காப் பியமும்
முத்தகங் குளகந் தொகைதொடர் முதலாம்
இத்திறத் தேனை யெத்திறத் தமிழும்
இந்நா ளுற்ற யிருங்கலி வலியால்
அந்நா ளெனப்பா ராட்டுத லிலராய்
அருகிய காலைப் பெருகுதல் வேண்டிப்
பனிபடு வெள்ளித் தனிவரை நீத்துப்
பொருவருங் கருணைத் திருவுரு வெடுத்தே

யன்பர் பரவத் தென்பால் வந்தோன்
வரியுடற் பேழ்வாய் வாலிய நிறத்துச்
சுரிமுகக் குடவளை சூலுளைந் தலறி
யொளிர்தரு முத்த முயிர்த்தன தவழுந்
தெளிதரு வுறைகருஞ் சேற்றகன் கழனி
மீனின மிளிர வெண்மதி தவழும்
வானெனக் கண்டோர் மனத்தகத் துதிக்க
மன்னிய வளம்பெறு மதுரை
நன்னகர் வருசிவ ஞானதே சிகனே (32)

வெண்பா.

ஞானங் கொடுக்குமிரு நாட்ட னசைவற்ற
மோனங் கொடுக்குஞ்சின் முத்திரையோன் —மாநகர்
தென் றருமை வந்த சிவஞான தேசிகன்சொல்
லொன்றருளு மின்ப வுரு (33)

கலித்துறை.

உருவந் தலைத்தந்த வூழின் வலியு மொழிந்தனன்மேற்
பருவம் பழுக்குமென் சஞ்சித முற்றும் பறித்ததல்லான்
மருவந்த வென்செயல் தன்செய லாக்கி வழிமறித்தான்
றிருவந்த கூடற் சிவஞான தேசிகன் செய்திநன்றே (34)

விருத்தம்.

நன்றிதென வரைமுகட்டுங் குனிதிரைநீர்த்
தடத்தகட்டு நான்கு திக்குந்

பேழ்வாய்—பிளந்தவாய். வாலிய—வெண்மை

கன்றியசெந் தழலகத்துந் தவம்புரிந்தா
　　லுமக்குமேற் கதியுண் டாமோ
சென்றிலகும் புகழ்த்தருமைச் சிவஞான
　　தேசிகனைச் சேவை செய்தால்
என்றுமொரு வருக்குமிவண் கிடையாத
　　பேரின்ப மெய்த லாமே

அகவல்.

எய்துதற் கரிய மைம்முகி லெண்ணிற்
பருவங் கண்டாங் கொருபொரு ளன்றி
யீண்டிய காலை வேண்டிய தருளா
அம்பொ னுலகிற் பைம்பொற் குவையும்
பாயொளி மணியுந் தூயபொற் றாசுந்
தோயாப் பன்னிற மேய்பூந் துகிலும்
பேரணி கலனு மோரணி மாலையும்
மறுசிகை யிலாத வறுசுவை யமுதும்
இன்னன செல்வ மன்னிநின் றளிக்குந்
தவளந் தரூஉ நவநிதி யென்னிற்
பெறுவோர் குறிப்பை யறிவ தின்றி
யில்லை யென்னச் சொல்லிய பின்னுங்
காவல ருள்ளத் தேவலி னன்றி
வானோர் தமக்குந் தானே யருளாஅ
இன்னிலை யானும் பன்னிய விரண்டும்
அறிவிலார் கொடையிற் பெறுகுநர் தவத்தால்
அன்புற லன்றிப் பண்பறிந் தாற்றா
வம்முறை யன்றி யிம்மையி னளிக்குந்
தன்கொடைக் குவமையுந் தானே யாகத்
தென்கம லாபுரி செழிக்க வந்தோய்

தாதவிழ் கொன்றைக் கோதை யானும்
விழைதரத் துயல்வரு குழையி னானும்
கருவிளை யென்னுஞ் செருவிழி யானும்
விண்டலர் செண்பகத் துண்டத் தானும்
மதுரக் கன்ன லதரத் தானும்
உருவக் கருங்கொடி புருவத் தானுங்
குறுமுகை முல்லைச் சிறுநகை யானும்
மடற்செறி பூக மிடற்றி னானும்
தூய்த்தே னிறைத்த வேய்த்தோ ளானுங்
கொங்கலர் பிண்டிச் செங்கை யானும்
கனத்தெழு குமிழ்நீர்த் தனத்தி னானு
மணிபெறு மாலின் மணியி னானும்
சுற்றிடு பூங்கொடிச் சிற்றிடை யானும்
மடல்விரி கதலித் தொடையி னானும்
அளியின முரலுந் தளிரடி யானும்
மன்னிய காவெனுங் கன்னிபூப் பெய்தும்
பருவங் கண்டு திருமணம் பேசப்
பூமல ரமளியும் பூவையுங் கிளியுந்
தேமாங் குயிலுஞ் செவ்வழி பாடத்
தோகை நடிப்பத் தொடுகட லெழுந்து
மேகம் படிந்து விண்முழ வதிரச்
சைவலக் கூந்தற் றண்டலை யெடுத்துச்
செவ்விய தாமரைத் திருமுக மலர்ந்து
வாவி யென்னு மடநடை மடவார்
காவி யென்னுங் கண்களி னோக்கப்

---

36. துயல்வரு—அசைகின்ற. பிண்டி—அசோகம். செவ்வழி—ஓர் பண். சைவலம்—நீர்ப்பாசி.

பொதியத் தென்றற் புமானுவந் தெய்தி
வதுவை செய்து மணம்பெறு தருமை
மேவரச் சிறந்து வீற்றிருந் தருளும்
நாவலர் புகழ்சிவ ஞான தேசிக
கல்வி யென்னுங் கடலிடைப் படினுஞ்
செல்வ மென்னுஞ் சிமையத் தேறினும்
வெம்புங் கரட வேழ மேற்கொண்
டம்புவி முற்று மரசு செய்யினும்
வேளை வென்ற மேதகு வனப்பிற்
காளைப் பருவங் கற்று நிற்பினுங்
கரும்பொனைச் செம்பைக் கனக மாக்க
வருஞ் சதவேதை வாத மெய்தினும்
அணிமா முதலிய வட்டமா சித்தி
தணிவற் றியற்றுந் தன்மைவந் தெய்தினும்
வருணந் தனக்கு மாசறு நிலைக்குந்
தெரிதரு விதியிற் சீல மெய்தினும்
மன்னிய வொழுக்க வரன்முறை பிறழா
நன்னெறி யால்வரூஉ ஞான மெய்தினும்
போதமிக் குலகிற் பொருணிலை யாமை
மேதகு வறிந்ததில் வெறுப்புவந் தெய்தினும்
சொல்லிய வன்றி யல்லன பிறவும்
கைவர வுலகி லெய்தினு மென்னுளம்
வெண்டிரு நீறுங் கண்டிகை மாலையும்
வேதா கமங்க ளோதுமஞ் செழுத்தும்
பேறு நின்பால் மாறு நேயமும்
உற்றிடு மடியார் மற்றிணை யில்லா

வாதம்—இரசவாதம்.

விணத்தாள் தாமே துணையென நாடோறும்
கனவிலு நனவிலு காண்குபு நின்று
மனமொழி மெய்களின் வணங்க
வாண்டரு ளிதுநான் வேண்டிய வரமே 36

வெண்பா.

வேண்டார் நிதிவேண்டார் விண்ணுலகும் மண்ணுலகும்
வேண்டார் தனிவீடும் வேண்டாரே—வேண்டுதமிழ்த்
தென்புவியிற் கூடற் சிவஞான தேசிகநின்
அன்ப ரடித்தொழும்பல் லால் 37

கலித்துறை.

ஆலுங் கொடிவிண் ணளவுந் தருமைக் கரசுதிசை
காலும் பரவுஞ் சிவஞான தேசிக னண்ணியவென்
பாலுங் கருணே புரிவோன் கமல பதம்பணிந்தால்
மாலும் பெருச்சச்சி தானந்த வாரி வழங்குவனே 38

விருத்தம்.

வாரிமருங் குடுத்தநனந் தலேயுலகம்
புகழ்ந்தேத்துந் தருமை வந்தோன்
நேரிசைச்செந் தமிழ்க்குதவுஞ் சிவஞான
தேசிகன்வா ணிகத்தைப் பாரீர்
காரியத்தி லொருவார்த்தை செவிக்குளுரைத்
தனன்பொருளேக் காட்டிப் பின்னே

---

37. தொழும்பு—பணிவு.

பாரிலுடல் பொருளாவி மூன்றுபொரு
ளையுமெனது பாற்கொண் டானே 39

அகவல்.

பாற்பட வகுத்த மேற்படு முலகும்
ஊழா னமைந்த கீழே ழுலகு
மறையென வகுத்து முறைபெறு மண்ட
மாழைச் செம்பொற் பேழையி னடுவண்
எழ்கட லேழ்புவி சூழறை யாக
நாவலந் தீவின் மேவுகண் டத்திற்
சுற்றிய வெட்டுஞ் சிற்றறை யாகக்
காப்பம ராழி நாப்ப ணறையின்
நீடுபொன் மேருப் பீடிகை முகட்டின்
நிலவிய வெள்ளிக் குலவரை யென்னும்
வெண்மணி யிடத்துக் கண்மணிக் கடங்கா
வொளியென வண்ட வெளிநிறைந் திலங்குந்
திங்கட் கண்ணித் துங்கவெள் விடையோன்
அரியணை மீது பரிவுட னிருந்து
நாலே ழாகம நூலினுட் பொருளை
யந்தமில் சிறப்பி னந்திக் கருளி
யவனருள் சுரந்து தவநிறை தூய
சனற் குமார முனிக்கினி தருள
வம்முனி பாதச் செம்மலர் பரவும்
மெய்ந்நெறிக் காட்சி யையனுக் களிப்ப
வம்மா தவமுனி செம்மாந் துயர்சிவ
போதத் தொருபரஞ் சோதிக் கருள
வப்பரஞ் சோதி யிப்புவி சிறந்தோர்
புண்ணியப் பயனால் வெண்ணைநல் லூரின்

மேவு மெய்கண்ட தேவர்க் கருள
கண்டநூற் பொருளை வண்டமி ழதனுற்
றொகைவகை விரியிற் பகருபு நோக்கி
மூதரு ணந்தி மாதவர்க் கருள
தெருளரு ணந்தி யருள்விழி பெற்று
மறை ஞான சம்பந்த மாமுனிக் கருள
அவனுள மகிழ்ந்து தவநிறை புலியூர்
மாசி லுமாபதித் தேசிகர்க் கருள
அவ்வழி மரபிற் செவ்விதி னோக்கி
விளங்கிய நன்னெறி துளங்கிய காலைப்
பொற்புறு வெள்ளி வெற்பினை யகன்று
தென்னு ரூரின் முன்னு ளெய்திப்
பாயொளி மணிப்பூண் கோயிலி னமர்ந்து
காரிய காரணத் தொடக்குறும் பிறவி
வாரியை மாற்றி மாசில்வீ டருள்வான்
அருமைசேர் நந்திக் கருளிய வண்ணம்
பெருமைசேர் ஞானப் பிரகாசனுக் கருள
வருளிய வண்ண லருளா லாங்கவன்
மருளிய வுயிர்கண் மனத்தகத் துற்ற
விருள்கடிந் திவற்றியல் பிவையெனக் காட்டும்
பரிதியின் ஞானசம் பந்தனுக் கருள
நாத னருள்சேர் ஞானசம் பந்தன்
மாதவ முனிவர் மருங்கு சூழப்
புன்னெறி முழுதும் போக்கிச் சைவ
நன்னெறி பரந்து நானிலந் தழைப்பப்
பத்திசெய் யடியார் பக்குவ நெறியிற்
சத்திநி பாதத் தாரதன் மியத்தாற்
கைப்பொரு ளென்ன மெய்ப்பொருள் காட்டி

யிப்புவி போற்றவீற் றிருக்குங் காலை
மாநகர் தில்லை மருவி யாயிரக்
கானிரை பசும்பொற் காவணத் தொருபால்
நிகரிலா னந்த நிட்டையுற் றிரவொடு
பகலற விருப்பப் பானுட் கங்குலின்
அம்பல வாண ரருளினு லெழுந்து
செம்பொ னிமையத் திருவருட் செல்வி
பள்ளி யறையிற் பாற்பட வமைத்த
வெள்ளிக் கிண்ணத் தள்ளுபா யசமும்
ஆடக வள்ளத் தோடெழு மமுதுங்
கடிப்பதத் தண்ணல் முடித்தவான் புனலும்
எடுத்து வந்து கொடுத்தவற் புதமும்
தீவர தரஞ்சேர் சிதம்பர நாதன்
மேவரக் குழைத்த வெண்ணீ றதனை
வெண்ணை யென்றெடுத் துண்ணுத லறிந்து
திருவுள மதனிற் புரியுமற் புதமும்
வேத வனத்திற் பேதையர் தீநெறி
கண்டனன் முன்போ லுண்டவற் புதமுங்
காய பதன காலத் தவனுரை
நேயத் தமிழை நிறைத்தவற் புதமும்
பரவு மானந்த பரவச னென்ன
வுரிமையி னுலகி னுயிர்க்கருள் காலை
பழுதிலா மேனியைப் பயந்தவ னுயிர்போம்
பொழுதறிந் தியோகம் புரிந்தவற் புதமுந்
தன்குரு நாதன் சின்மயத் தெய்தி
யமர்ந்தபின் தானிவ் வமருல கிருத்த

காவணம்—மண்டபம்.

லடமதென வெண்ணி கெடாவறு பவத்தில்
முற்றிய காட்சியை முன்னே யறிந்து
உச்சிமேற் புலவர்கள் சச்சிதா னந்தற்
கச்சமில் பேற்றை யருளுதற் பொருட்டுப்
பூரண நிலைநின் றூரண முழங்கப்
பரிதியி னெழுந்து விரிகலை ஞானம்
தெள்ளிதி னுணர்த்திய ஒள்ளிய திறனும்
அருள்புரி சச்சிதா னந்த னென்னக்
கருதுமன் பருக்குக் கதியருள் காலை
பூசை கிளிகுயில் போத்தெலி யரவம்
பாசநீத் தருள்பெறப் பார்த்தவற் புதமும்
இங்கிலம் புரக்கு மெறிபடை வேந்தன்
றன்னிகர் குரவன் சமாதியி னெழுந்த
வருட்குறி காண வறநூல் வினவ
விருட்கன விடையரு ளியவிறும் பூதும்
திருவிடை மருதூ ரானிவன் போலச்
சென்றறி சைவவை திகத்துங் காணோம்
என்று செந்தமி ழியம்புமற் புதமும்
உய்வகை வீர சைவ னறிந்து
கண்டதன் மனக்கோள் கடிந்துசெந் தமிழாற்
கொண்ட நிலையெனக் கூறுமற் புதமும்
மாசி லாமணித் தேசிக னாகி
மருவிய வுயிர்க்கருள் வழங்குங் காலை
யிம்மையி னொருமையி னிருது நீங்கிச்
செம்மையி னிற்கச் செய்தவற் புதமும்
நம்பல மென்றியாம் நம்புறும் வெள்ளி
யம்பல வாணற் கருங்கலை யுணர்த்திச்
சின்மயங் காட்டிய உன்னத நிலைமையும்
புலவர் தமக்குத் திலகம தாகிய

குமர குருபரற் கமர்குரு வாகி
யம்முனி வரன்சொல் விம்மித ஞானக்
கோவைநேர் மும்மணிக் கோவை புனைந்தபின்
பற்பல வான்றோர்க் கருளுமற் புதமும்
ஞானசம் பந்த நற்குரு வாகி
மோனமா தவர்க்கருள் மொழியுங் காலைத்
தேரிடை மருதூர்த் தெருவீ தியிலவன்
நேரின்வந் திறைஞ்ச நின்றவற் புதமும்
நற்கரு ணைத்திரு ஞானசம் பந்த
சற்குரு வாகித் தழைத்தருள் காலை
திருவருள் மேனி திளைத்தா டியசீர்
ஒருவன் வெண்குட்ட மொழித்தவற் புதமும்
அலகை தனித்தோ ரனுட்டா னத்தின்
பலனுற வப்பாற் பட்டவற் புதமும்
கன்னியைப் பெறுவான் கமழ்பரி கலமென்
றன்னந் தனைமோந் தளித்தவற் புதமும்
அகவரை தனினின் றடிமலர் பதியக்
குகனருட் காட்சி கொடுத்தவற் புதமும்
மாந்தளிர் மேனி வள்ளியை நாடச்
சாய்ந்தருட் காட்சி தந்தவற் புதமும்
பந்தம் பரித்த பனவன்மீட் டேந்தச்
செந்தழல் வெப்பந் தீர்த்தவற் புதமும்
பரிகலச் சேடம் பங்கய னெடுமாற்
கரிய வருட்குறி யானவற் புதமுங்
கானத் தடத்துங் கடத்தினுங் கங்கை
வானுறப் பொங்கி வழிந்தவற் புதமுங்

பனவன்—பிராமணன்.

கருதிய வாகனம் புரிய மணிச்சிலை
யருள்வி நாய னுகுமற் புதமும்
வரம்பெறு வேளூர்ப் புரந்தனி லமருஞ்
செவ்வே ளைத்தொழு மவ்வே ளையினிற்
பட்டிமை மனத்தோர் பார்த்திட விருகாற்
கட்டிய திரையறக் கண்டவற் புதமும்
குராக்கினத் தொழுக்கங் குறித்தோன் முத்திச்
சரக்கரை யெனத்தமிழ் சாற்றுமற் புதமும்
உருப்பயில் பிறவி யொழிக்கும்யோ சனையிற்
கருப்பம் வீழக் கண்டவற் புதமும்
போக மருத்திப் புகுத்த முத்தியிற்
காக வடிவங் கடந்தவற் புதமுந்
தெருள்பெற வருளுந் திருவம் பலசற்
குருவென வுயிர்க்கருள் கூர்ந்திடு காலை
யருமருந் தின்றி யட்ட பந்தனம்
இருநிலங் காண வியற்றுமற் புதமு
மழகிய திருச்சிற் றம்பல குருவாய்ப்
பழவடி யார்துயர் பாற்றுங் காலை
யெண்ணரும் யோசனை யெல்லையி லவன்போற்
கண்ணின்முன் னுயிர்வரக் கண்டவற் புதமு
மிடைமரு தூர்மடத் திருந்தவ னகல
விடையவன் கனவின் மேவுமற் புதமும்
மேவும் புகழ்த்திரு நாவுக் கரச
குருபர னென்ன மருவிய காலைத்
துதிசெய விளங்கு மதிசயம் பலசெய்
தருந்தவர் போற்ற விருந்தவற் புதமும்

பட்டிமை—வஞ்சகம். பாற்றும்—நீக்கும்.

இன்ன பிறவு மெண்டிசை யுலகில்
அந்நாட் செய்த வற்புத மாகவுந்
தலந்தனி லிந்நாட் சைவ மோங்கி
யிலங்கவு மவன்ற னின்னருள் பழுத்துக்
காணி லசையாக் காட்சி யானும்
பேணிய பொருளின் பெருக்கத் தானும்
துன்றிய தெனவுயர் தோற்றத் தானும்
ஒன்றினுஞ் சலியா வுரத்தி னானுங்
கருணை மேரு வெனக்கட லுடுத்த
இருநிலத் தன்ப ரியற்றிய தவத்தால்
ஞான தபோதனர் நண்ணிவாழ் தருமை
மாநகர் வருசிவ ஞானதே சிகனே
வரையென வருதிரை மன்னிய வேகப்
பிரளயங் கடலிற் பெருகுத லறிவான்
குற்றா லத்துக் குளிர்வரைச் சாரல்
உற்றா னெனமடத் துற்றொரு வந்த
மாக விவண்விட் டாங்கண் செல்கெனத்
தோகை பாகன் சொன்னவற் புதமும்
பொங்கருட் பார்வை புரிய முனிந்த
மங்கை கணவனை மணந்தவற் புதமுந்
திருப்புன வாசற் செம்மலைப் பரவ
விருப்புறு மெல்லையின் வெண்மதி வேணியன்
எறிகதிர்ச் சூல மேந்தியந் நகராள்
குறுநில வேந்தன்முன் குறுகினன் கனவிற்
றோன்றி நாமுநம் மடியருந் தோன்றுவ
மூன்று வைகன் முறைபிற ழாது
பூசனை புரியெனப் பொம்மென விழியா
வீசன தருணிணைந் திருநா ளியற்ற

போந்து புரியெனப் பூசனை புரிய
நேர்ந்தனை நீயென நிகழ்த்துமற் புதமும்
வீறு கொண்ட மெய்யடி யவர்பால்
மாறு கொண்ட மறவர்தெ ன்றருமையிற்
சிவராத் திரியிற் சினத்தொடு செருவிளைப்
பவராய்த் தோன்றப் பற்பல பூதம்
வாம்பரி யேறி வந்திட மறவர்
தாம்படை யிழந்து சாய்ந்தவற் புதமும்
பரிதி யறியாப் பானுட் கங்குல்
இருள்குடி யிருப்ப விடங்குடி லளாவிக்
குராங்கின மருள நெருங்கிய சோலைச்
சார லோங்கிய தடவரை நாட்டுச்
சேரன் மரபு செழித்திட வந்தோன்
வஞ்சிமாத் தாண்ட னென்ன வண்டமிழ்
விஞ்சையர் புகழும் வேந்தர் சிகாமணி
காயா மேனிக் கண்ணனைப் பரவிய
மாயா வாதி மதமேற் கொண்டோன்
றெய்வ நான்மறைத் தெளிவெனச் சிறந்த
சைவ நன்னெறித் தன்னிற் சார்ந்து
மேதகு மேன்மை வெண்ணீ றணிந்துங்
காதலி னெந்தை கண்டிகை புனைந்தும்
அரனுரு வாய வஞ்செழுத் தோதியும்
இரவினும் பகலினு மீசனைப் போற்ற
வீறுள் படாத்தன் மெய்த்தவர் குழாத்தொடுங்
காணுக் காட்சியிற் காட்டுமற் புதமுந்
தெரிசரங் கொம்பிற் சென்றிட வடியிற்
கருடனூர் பார்வை கலந்ததை யறியா
துலைவிலா நாகமுன் னுறுதொழில் புரிய

மலைவிலா னென்ன மன்னுமற் புதமுந்
தணிப்பிலாக் கருணைத் தாணு வாலய
மணிக்கத வடைத்தோன் மாய்ந்தவற் புதமுந்
தராதல மூலா தாரத் தெழுந்த
நிராமயன் கனவி னீவரு கென்னுந்
தன்னக மகிழ்ந்து தம்பிரான் றொழுநீ
பொன்னடி வணங்கிப் புகழ்ந்தனை போற்றி
யீண்டவ னன்பர்சூழ்ந் திலங்கவிங் கேயவ
வேண்டு கென்ன விதித்த வற்புதமும்
இவைமுத லாகிய நவையிலா வற்புதம்
நின்னு ளின்கண் மன்னிய வற்புத
நடத்திய விவற்றை நாடொறு நாடொறு
மெத்திசை மாந்தர் யாவ ராயினு
மன்னிய செல்வமு மருவி
யந்நிலை யெய்துவ ரருட்பெருந் திருவே

வாழிநவ மணிவீசி யகிலுந்தி வருகின்ற
  வைகைசூழ் மதுரை மூதூர்
வாழிசெங் கமலப்பொ குட்டுவட் டணையின்வளர்
  மயின்மேவு கமலா புரி
வாழிவெண் ணீற்றொளி பரந்தகத் திருளகல
  மன்னுதென் றருமைநக ரம்
வாழியடி யவர்வாழி சிவஞான தேசிகன்
  வாழியவ னருள்வாழி யே

ஸ்ரீ சிவஞானதேசிகன் றிருவடிகளே.

சரணம்.

உ

குருபாதம்.

திருக்கைலாயபரம்பரை

தருமபுரம் ஆதீனம் கூ-வது குருமூர்த்தியாய்

எழுந்தருளியிருந்த

ஸ்ரீ-ல-ஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசார்ய

சுவாமிகள்

தோத்திரப்பாடல்.

இது

சிதம்பரநாத முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

குருபாதம்.

ஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தோத்திரப்பாடல்.

என்னை யறிந்திருக்க யின்பசுகந் தோன்றி யெனைப்
பின்னை மறைப்ப தென்ன பேசிடீர்—முன்னமுள்ள
சித்தோ கமலைத் திருஞான சம்பந்தன்
எத்தோ விதுவறியே னே. 1

ஆன வறிவி லமர்ந்திருக்கு மப்போது
தேனைநிக ரின்பசுகந் தித்திக்கும்—பானுவென
எங்கும் வெளியா யிருக்குஞ் செனனவிருள்
தங்குமிட மிவ்விடமோ தான். 2

வண்டுசெறி கூந்தல் மடமாத ரிங்கிதமே
கண்டுமனங் கூறக் களித்தாலும்—பண்டுபோ
லெண்ணேன் வினையென்பேன் என்னிடத்துச் சற்றுவரப்
பண்ணேன் றிருவினையைப் பார்த்து. 3

சும்மா விருக்கச் சுகம்பிறந்து தூங்குவது
மம்மா விதுபுதுமை யானலு—மிம்மாயக்
கண்டறியோ முன்னங் கதையதனி லுங்கேளோம்
பண்டறியோம் நெஞ்சே பரிந்து. 4

கூத்தாடி னுலுநரர் கொண்டாடி னுமின்னுர்
பார்த்தாலுங் சற்றுமதைப் பாரேனே—மாத்தாய

செந்தமிழோர் போற்றுந் திருஞான சம்பந்தன்
தந்தவரு ளைப்பார்த்துத் தான். 5

எந்தவினை வந்தாலு மெய்துமோ வெய்திடினு
மந்தவினை கட்டுப்பா டாகுமோ—சிந்தைதனிற்
சித்தன் கமலைத் திருஞான சப்பந்தன்
கத்தனரு ளுட்புகுந்தக் கால். 6

துன்ப வினையைத் துறந்தேன் சுகமான
வின்பவெள்ளத் துள்ளே யிருந்தேனே—அன்பர்தொழுஞ்
சீமான் கமலைத் திருஞான சம்பந்தக்
கோமான்றன் பொன்னடியைக் கொண்டு. 7

ஆற்றுவெள்ள மென்கோ வருவியென்கோ வானமண
லூற்றுவெள்ள மென்கோ வுவமைதான்—தேற்றியென்றன்
சிந்தையே நின்ற திருஞான சம்பந்தா
வெந்தையே வந்தவின்ப மின்று. 8

சொக்கரையே நன்றாய்த் துதிப்பே னுலகத்துள்
எக்கரைநான் சற்றுமினி யெண்ணேன்காண்—அக்கரையே
சாத்துந் திருஞான சம்பந்தா நின்னருளைப்
பார்த்து மிருப்பேன் பரிந்து. 9

சுகமான வெள்ளமென்றுந் தோன்றியே யிந்தச்
செகமான துங்கொண்ட செய்கை—மிகவுமனந்
தேர்ந்தறியே னூரூர்த் திருஞான சம்பந்தா
வேந்தனே சொல்வாய் விரைந்து. 10

பேய்தா னடித்துப் பிடித்தாலும் பாம்புநஞ்ச
மோயாது வாயா லுகுத்தாலு—மாயாதே

சிந்தையே யாரூர்த் திருஞான சம்பந்தா
வெந்தையே யென்றே யிரு. 11

சொல்லு மறந்து தொழிலின் றிறமறந்தே
யல்லும் பகலுநா னற்றேனே—நல்லார்கள்
திண்ணமா யெண்ணுந் திருஞான சம்பந்த
வண்ணலான் ருளே யறிந்து. 12

தேனேகற் கண்டோ திரளமுத மோதெரிந்திங்
கானே ருரையீ ரறிவினல்—மானேங்குஞ்
செங்கையா ரூரூர்த் திருஞான சம்பந்தன்
கங்கையான் செம்பொற் கழல். 13

சிந்தைகுடி கொண்ட திருஞான சம்பந்தா
எந்தையே யெங்கே யிருந்தாலுஞ்—சந்ததமு
முன்னையே போற்றி யுனதுசுகத் தேயிருந்த
வென்னையே ரட்சித்தா யே. 14

பூதங் கரணம் பொறிபுலன்கள் பொய்யென்றான்
வேத முடிவின்ப மெய்யென்றான்—சீதஞ்
செறிந்தபுக ழாரூர்த் திருஞான சம்பந்த
னறிந்தவர்க்கு வாழ்வா னவன். 15

தன்னையறி வித்தான் றனுவாதி பாசமென்றான்
என்னையுமோ பூரணநீ யென்றுரைத்தான்—சொன்ன
திருவார் கமலையில்வாழ் தேசிகசம் பந்தன்
கருவான வன்னங் கடிந்து. 16

இந்தவுடல் பொய்யென்றான் என்னை யறிவென்றான்
வந்தசுகந் தன்னருளின் வாழென்றான்—செந்தேன்

செருந்துறையு மாளூர்த் திருஞான பந்தன்
குருந்துறைவா னென்னையாட் கொண்டு. 17

எத்துயரம் வந்தாலு மெங்கும் பகைத்தாலுஞ்
சத்துருக்கள் வந்து தலைப்படினும்—புத்திதனிற்
றேரேன் கமலைத் திருஞான சம்பந்தா
பாரேன் அருட்படையைப் பார்த்து. 18

நானென் றிருந்ததெல்லாம் நானல்ல வென்றுசொல்லித்
தானன்றி யொன்றுமில்லைத் தானென்றான்—மான்மழுவுஞ்
சேர்க்குங் கரத்தான் றிருஞான சம்பந்தன்
பார்க்கும் படியெனையே பார்த்து. 19

இருந்தாற் சுகம்பிறக்கு மென்பர் பெரியோர்
திரிந்தாலுங் கேவலமே சேர்ந்தும்—பிரிந்தறியேன்
சித்தா கமலைத் திருஞான சம்பந்தா
அத்தாநீ தந்த வருள். 20

நடந்து மிருந்து நயனங்கண் மூடிக்
கிடந்துமிகு கேவலங்கீ ழாகப்—படர்ந்தறிவிற்
செல்லுங்கோ ளென்றான் றிருஞான சம்பந்தன்
வெல்லுங்கோ ளென்றான் வினை. 21

பைங்கமுகின் பாளைப் பரிமணத்தைக் கொண்டுகால்
அங்கணிலா வுக்கீந்த வாரூரே—மங்குலெனும்
சென்மவலை சேராத் திருஞான சம்பந்தன்
நன்மைவலை தந்தான்றன் னாடு. 22

ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகன் றிருவடிகளே சரணம்.

உ

குருபாதம்.

செந்தமி ழிரட்டைமணி மாலை

இது

திருக்கைலாய பரம்பரை

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீமத் சண்முகத்தம்பிரான் சுவாமிகளால்

இயற்றி யருளியது.

உ

செந்தமிழிரட்டைமணி மாலை.

சாற்றுக்கவிகள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற் பரிசோதகர் மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள் இயற்றியது.

தருமையா தீனத்துச் சற்குருவின் றொண்டர்குழாந்
தன்னிற் றோன்றி
யொருமையா மகத்துறவா லோங்கியசண் முகமுனிவ
னுலகு வக்கும்
பெருமையார் செந்தமிழி னிரட்டைமணி மாலையொன்று
பிறங்கச் செய்த
தருமையா மிதன்சிறப்புச் சொலவல்லோ மல்லேங்கற்
றறிவு ளோரே.

மதுரை விவேகபாநு பத்திராதிபர் மு, ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களியற்றியது.

தருமபுர வாதீன முனிவர்களிற் சிறந்து
தழைக்கும்வளத் தில்லையிற்செந் தமிழ்ச்சங்க நிறுவி
மருவுபுக ழக்கிராச னதிபதி யாகி
மாண்புறுத்து சண்முகப்பேர் மாதவசி ரேட்டன்
சருவசனங் களுந்தமிழின் பெருமையறிந் தேத்தச்
சாற்றியசெந் தமிழிரட்டை மணிமாலை நூலை
ஒருதரமா கினுங்கற்றோ ரயல்மொழியை விரும்பா
ருண்மைநெறி யறிவார்கள் திண்மையிது வாமே,

வெண்பா.

முக்கண்ணனுக்கு முத்தமிழும் முக்கண்ணெனக் கூறியது.

மேலாந் தமிழ்மூன்று மேவுமுக் கண்ணாக
வேலா வுலகதனை யீன்றளித்தோன்—மாலாக
முச்சங்கத் தும்மிருந்து முன்காத்தா னத்தமிழை
யிச்சங்கத் துங்காப்பா னின்று. 7

கலித்துறை.

செந்தமிழி னோர்பகுதியா லிறைவன் வீடளித்தலைத் தில்லையிற்
கண்கூடாகக் காணலாமெனக் கூறியது.

இன்றுந் தமிழி னிசைநா டகத்ினை யெய்ந்தரனார்
மன்றும் புகழ நடித்துயிர் யாவும் வரவழைத்துத்
துன்றும் படிமுத்தி கூட்டுகின் றானிதைச் சூழ்ந்துலகீர்
சென்றும்பர் போற்றுநந் தில்லையிற் கண்டின்பஞ் சேர்மின்களே.

வெண்பா.

செந்தமிழே கற்கப்பாலதெனக்கூறியது.

சேர்மின்கள் சங்கமதைத் தேர்மின்கள் செந்தமிழ்நூல்
பார்மின்க ளின்பதனைப் பாருலகில்—வார்மின்கள்
போனேக்கும் வேணிபுனைப் பூந்தில்லை யிற்றமிழ்த்தென்
பானேக்கி யாடுதலைப் பார்த்து. 9

கலித்துறை.

செந்தமிழ் சிவஞானமுணர்த்துந்தேசிகனே யெனக்கூறியது.

பார்த்துத் தெளிந்த புலவோர் தமிழினைப் பாருலகிற்
கூர்த்தமெய்ஞ் ஞானங் கொடுத்தழி யாப்பதங் கூட்டியருட்
சேர்த்திட வந்தநந் தேசிக னேயெனத் தேர்ந்தகத்தை
யீர்த்திடு மன்பினிற் போற்றிமெய்ஞ் ஞானங்க ளெய்துவரே.

வெண்பா.

இறைவன் செந்தமிழாற் றுதிப்போர்க்குச் சிவானந்தப் பெருவாழ்வளித்தருளுவனெனக்கூறியது.

எய்திக் கதியளிக்கு மேழ்பவத்தை மாற்றுவிக்கும்
பெய்திக் கனையசுவைப் பேறருளும்—நொய்திற்
சகநோக்க வந்தாண்டு சன்மார்க்க மீனு
மிகநோக்கு மண்ணறமி ழீண்டு. 11

கலித்துறை.

இறைவன் முத்தமிழால் முப்பொருளை மூவங்கத்தா லுணர்த்தி யளித்தருளுவனெனக் கூறியது.

ஈண்டு பொதுவி னியைந்தாடி யின்றமி ழேந்தியலை
யாண்டு பரன்றிரு வாயினிற் கூறி யணியறமும்
தூண்டு வருமிசை கண்டத்திற் பாடித் துணிபொருளும்
தீண்ட வருட்பத நாடகஞ் செய்தின்பு தேற்றிடுமே. 12

வெண்பா.

தென்மொழி வடமொழி யிரண்டுஞ் சிவஞ்சத்தி யாமென்றும் மற்றமொழிகள் மற்றைய தேவர்களுமாமெனக் கூறியது.

தேற்ற முயிருடலே செந்தமிழு மாரியமும்
போற்றுஞ் சிவஞ்சத்தி போலுமே—ஆற்று
மொழிபலவு மங்கமதே மூள்பிரமன் முன்னு
மொழிசுரர்கள் போலவே முன். 13

கலித்துறை.

சிவபிரான் செந்தமிழ் விருப்பால் இப்பூமியிற் பற்பல வுருக்கொடு வதிந்தருளினனெனக் கூறியது.

முன்னாண் முதலிது காறும் மிறைவன் முதுதமிழைப்
பன்னாள் பயின்று நசைதீர்ந் திடாது பலமுறையு
மன்னாய்க் குருவாய் மகவாய்ச் சுரராய் வளர்குறியாய்த்
துன்னு யெழுந்து வதிவா னெனிற்றமிழ் சொல்லுமதே. 14

வெண்பா.

இத்தமிழ்மொழி நால்வர்களாலு நாட்டப்பட்ட தெனக் கூறியது.

சொல்லு மரசுஞ் சுடர்காழிப் பிள்ளையுமால்
வெல்லுந் திருநாவன் மேதகையும்—புல்லும்
புறச்சமய கோளரியும் போற்றியது தெய்வத்
திறத்தமிழோ வேனையவோ செப்பு. 15

கலித்துறை.

கலைமகளும் தேவர்களும் தமிழ் நாட்டிற் பிறந்து தமிழால் பரவி நூலியற்றிப் பேரின்பமார்ந்தனரெனக் கூறியது.

செப்புங் கலைமகண் மாலயன் கந்தன் றிருவுமையுஞ்
செப்புஞ் சுராரு நராய்த் தமிழைத் தெளிந்தறிவு
செப்பும் பலகவி நூல்களும் பாடிச் செகதலத்திற்
செப்புஞ் சிவனருட் சேர்ந்தின்ப மாதைத் திளைத்தனரே. 16

வெண்பா.

தென்மொழி வடமொழி யிரண்டுஞ் சிவஞ்சத்திபோல்
விளங்கி முறையே வீட்டையு மாட்டையு மளிக்குமெனக்
கூறியது.

திளைக்குந் தமிழே சிவமா முமையா
டிளைக்கும் வடமொழியே தேரிற்—றிளைக்குமரன்
வீடளிக்க வம்மை விருப்பளித்தல் போலிவையும்
வீடளிக்கு மாடளிக்கும் வித்து. 17

கலித்துறை.

தென்மொழி வடமொழிகளின் ஞாதம்மியத்தையுபமான
முகத்தால் விளக்கிச் கூறியது.

வித்தாந் தமிழிற்கும் வடமொழி மாதிற்கு மேதினியிற்
சத்தா முவமை யுயிருடல் சூரியன் சந்திரனே
டித்தா ரணிதந்தை தாய்சிவஞ் சத்தி யெழில்வலக்கண்
முத்தா ரிடக்கண் சிரமுட லாக மொழிந்தனரே. 18

வெண்பா.

தென்மொழி வடமொழியினுஞ் சிறந்ததெனக் கூறியது.

மொழிந்தாற் பயனென்ன மூதறிவோய் முன்ன
மிழிந்தார் மதப்போருக் கெய்த்து—ளழிந்து
மறைந்த மறையோ மலைந்தவரை மாய்த்துண்
ணிறைந்த தமிழ்க்கு நிகர். 19

கலித்துறை.

தமிழ்மொழியோடு பிறமொழிகளொவ்வாவெனவுவமான முகத்தால் விளக்கிக் கூறியது.

நிகரி லுயிருக் குடலோ நிகர்க்கு நிகழ்கதிர்க்குப்
பகரு மதிநிக ராமோ சிவற்குப் பரைநிகரோ
புகரில் புருடர்க் கெதிரோ மகளிரிப் பூமொழிக
டிகழுந் தமிழுக் கெதிரோ புகலுமின் றேர்ந்துணர்ந்தே. 20

வாழ்த்து.

புவிவாழ்க வந்தணர் பொன்மழை வாழ்க புகழ்பசுவி
னவிவாழ்க வாவுறு மைந்திவண் வாழ்க வருந்தமிழ்கேள்
செவிவாழ்க வீந்தநற் செந்தமிழ் வாழ்க சிதம்பரம்வாழ்
கவிவாழ் மணிமொழி வாசகன் சங்கமுங் காமுறவே.

முற்றிற்று.

ஸ்ரீ மாணிக்கவாசகன்றிருவடிகளே சரணம்.

குருபாதம்.

தனிச்செய்யுட்கள்.

வெண்பா.

சுத்தஞ் சிவமிரண்டுந் தோன்றியிடு ஞானத்திற்
சத்திசா தாக்கியமுஞ் சார்கிரியை—இச்சைதரும்
ஈசர்தமை யிம்மூன்று மெண்ணுபரை யப்பரைக்கங்
காசிலரு ணற்சிவமே யாம். 1

கால நியதி கலைமூன்றுஞ் சுத்தவித்தை
யேலவருஞ் சுத்த மிராகத்தைக்—கோலியே
ஈசர் செலுத்துவர் மாயைக்கு நற்சிவமா
மாயைபுரு டன்சாதாக் யம். 2

மாயை பகுதிதனை வந்தியற்றுங் காலமெங்கு
மேய நியதிசிந்தை யையியற்று—மாய
கலையகந்தை வித்தைபுத்தி காணமனத் தார்க்கு
மலைபுருட னுலைந்து மாம். 3

பொற்பொதுவி லாடுமர னைந்தெழுத்தாற் போதத்தைத்
தற்பரத்தே வைத்தபடி சாற்றியிடில்—பற்பவஞ்செய்
முன்னிரண்டை வீட்டியதில் பின்னிரண்டால் வேதித்துத்
தன்னிரண்டு முன்னிலைதந் தான். 4

நவ்வழியு மவ்வழியு நாடாதே நாடரிய
வவ்வழியை யவ்வதனை வாவென்று—செவ்வடியான்
சிய்யென்னு மோரெழுத்திற் சேர்த்தினன் றென்காழி
மெய்யருளும் வள்ளல் விரைந்து. 5

பேருக வைங்தெழுத்தி னுண்மைபெறும் பெற்றிமையிற்
கூரு மொழியருளிற் கூறுங்கால்—வேருகா
வித்தகமெய்ப் பேரின்பம் வேதகமா மைந்திற்கு
முத்தியெழுத் தொன்றே முதல். 6

நீயிருக்க வென்னறிவி லியான்பட்ட நெட்டூரந்
தீயிருக்குங் கையாவென் செப்புகேன்—போயகலப்
பாவனைசெய் வார்க்கரிய பாதாசி வாயசிவ
தீவினையி லேயறகொங் தேன். 7

விருத்தம்

நகார மகாரஞ் சிகார முதலாய்
வகார யகார வாசி யென்வே
நகார மகார மிரண்டு மறுத்துச்
சிகார முதலாய்ச் சிறந்திருந் தானே. 8

வேறு

நவ்வை மவ்வை யுங்கடந்து நாடொணுத சிய்யையும்
வவ்வை யவ்வை யுந்தெளித்து வாசியான போதக
முவ்வு சத்தி யுண்ணிறைந்து யுச்சியூ டுருவியே
யிவ்வகை யறிந்து போத லீசனுணை யீசனே. 9

முற்றிற்று.